TVEC

# 2020

# ANNUAL REPORT

වාර්ෂික වාර්තාව ஆண்டு அறிக்கை

තෘතියික හා වෘත්තිය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය
திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு
State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| ஆணைக்குழுத் தகவல்கள் | | 2 |
| தொலைநோக்கு மற்றும் செயற்பணி | | 3 |
| தலைவர் அவர்களின் செய்தி | | 5 |
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | | 7 |
| 1.0 | அறிமுகம் | 9 |
| 2.0 | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக்கட்டமைப்பு | 9 |
| 3.0 | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி | 13 |
| 4.0 | நிர்வாகம் மற்றும் நிதி பிரிவு | 15 |
| 5.0 | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு | 25 |
| 6.0 | பாடநெறிகளின் பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | 35 |
| 7.0 | தேசிய தேர்ச்சி நியமம், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு | 41 |
| 8.0. | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு | 51 |
| 9.0 | கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு | 63 |
| 10.0 | தகவல் முறைமைகள் பிரிவு | 81 |
| நிதி அறிக்கை | | 95-120 |
| | வருமானக் கூற்று | 95 |
| | நிதிநிலைக் கூற்று | 96 |
| | தேறுமதியில் மாற்றங்கள் | 97 |
| | காசுப்பாய்ச்சல் கூற்று | 98 |
| | வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள் | 100 |
| | வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள் | 109 |
| | நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை | 116 |
| தணிக்கை அறிக்கை | | 119 |
| அமைவான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை | | 120 |

# ஆணைக்குழுத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| நிறுவகம் | : | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு |
| அமைச்சு | : | திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு |
| முகவரி | : | 03 ஆம் மாடி,<br>“நிபுணதா பியச”, 354/2,<br>எல்விட்டிகல மாவத்தை,<br>கொழும்பு - 05 |
| மின்னஞ்சல் | : | info@tvec.gov.lk |
| இணைய தளம் | : | www.tvec.gov.lk |
| தொலைபேசி | : | 011 - 7608000 |
| தொலைநகல் | : | 011 - 2555007 |
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வு அத்தியட்சகர்,<br>கணக்காய்வு அத்தியட்சகர் திணைக்களம்,<br>சுதந்திர சதுக்கம்,<br>கொழும்பு - 07 |
| வங்கி | : | மக்கள் வங்கி<br>வை. எம். பி. ஏ கிளை<br>பொறளை |

## தொலைநோக்கு

தொழிற் சந்தைக்கு பொருந்தும் வகையில் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வியை சகலருக்கும் வழங்குவதே எமது தொலைநோக்காகும்.

## செயற்பணி

சவால் மிக்க உலக சந்தை தேவைப்பாடுகள் மற்றும் சமூக - பொருளாதார குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பயனுறுதியும் வினைத்திறனும் மற்றும் தர உத்தரவாதமும் வாய்க்கப்பெற்ற தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி முறைமையை ஸ்தாபித்தலும் மற்றும் அதனைப் பேணுதலுமே எமது செயற்பணியாகும்.

# தலைவர் அவர்களின் செய்தி

## வித்தியாஜோதி பேராசிரியர் தயந்த விஜயசேகர

2020 ஆம் ஆண்டில் நான் தலைவராக கடமையாற்றியதுடன் திரு ஆர்.டீ.எஸ் குமாரரத்ன அவர்கள் பணிப்பாளர் நாயகமாக மே மாதம் 31 ஆம் திகதி வரையில் கடமையாற்றியுள்ளார். யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து பிரதி பணிப்பாளர் நாயகமாகிய திரு ஜானக ஜயலத் அவர்கள் பதில் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார்.

இவ் வருட ஆரம்பத்தில் பிரிவுகளின் தலைவர்களுடனான இணக்கப்பாட்டுடன் ஆணைக்குழுவின் நிர்வாக செயற்பாடுகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் அது அனைத்து பிரிவுகளினதும் மற்றும் அலுவலர்களினதும் வினைத்திறன் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றினை மேம்படுத்துவதற்கு காரணமாகியது. பங்காளிகளிடையில் நிலவிய தவறான அபிப்பிராயங்கள் அகன்று மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் ஒழுங்குபடுத்தும் நிறுவகமாக மீளுருவாக்கம் பெறுவதற்கு முயற்சித்துள்ளது.

எவ்வாறாயினும், பணிப்பாளர் நாயகத்தின் பதவியினை நிரப்புதல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையினால் அதற்காக பத்திரிகை வாயிலான விளம்பரமொன்றின் மூலம் நியமனம் செய்யவேண்டியிருந்தது. இச் செயற்பாடானது ஆணைக்குழுவினை வழிநடத்தும் சபை, திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி அமைச்சு மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய தொழிற்தகைமை (NVQ) முறைமையானது மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக துறைசார் சர்வதேச நிபுணத்துவம் மிக்க ஆலோசகரான டேவிட் லைன் அவர்களின் ஆலோசனையிற்கு இணங்க இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும், அண்ணளவாக இரண்டு வருட காலப்பகுதிக்கு மூன்று பணிப்பாளர் பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் நிலவியதுடன் அப் பதவிகளிற்காக பதில் கடமை அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு காரணங்களினால் பதில் கடமை காலமானது காலங்கடந்து சென்றிருந்ததுடன் ஏனைய பதவிகளிற்கான வெற்றிடங்களுடன் கூடிய விளம்பரமானது பிரசுரிக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி தேர்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் மேலும் பதவிகளிற்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. பின்னைய காலத்தில் பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றினை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை வெளியீட்டினை தயாரிப்பதற்கு இவ் வருடத்தில் தேசிய கல்வி ஆணைக்குழு உடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை வெளியீட்டினை வெளியிடுவதற்கு உயர்ந்த பட்ச பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இச் செயலமர்விற்கு அமைவாக அத் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை வெளியீட்டினை தயாரிக்கும் செயற்பாடு வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறன்கள் துறைசார் சபைகளின் செயற்றிறனானது இதைவிடவும் கூடுதலாக காணப்படவேண்டியுள்ளதுடன் இதனுடாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களின் முகாமைத்துவத்தினை முறைப்படுத்த வேண்டியுமுள்ளது.


தொழில்சார் வழிகாட்டலினை வழங்கும் தேவைப்பாட்டிற்காக TVET Guide 2020 தகவல் முறைமை பிரிவின் மூலம் மாவட்ட அடிப்படையில் பிரதிகளை தயாரிப்பு மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக மிகவும் விரிவான முறையில் தகவல்கள் வழங்கப்பட்டிருத்தல் ஆகியன தொழில்சார் வழிகாட்டல் தேவைப்பாடுகளிற்கான வழங்கல்களை மேற்கொள்ள மேலும் உதவியளிக்கும்.

தேசிய தொழிற்தகைமை பிரிவானது மிகக் குறைந்த அலுவலர்களுடன் அவசிய ஆவணங்களை தயாரித்து பங்காளிகளிற்கு முடிந்தளவில் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அலுவலர்களின் பொருட்டு நிலவும் பற்றாக்குறையினை பொருட்படுத்தாமல் பதிவு செய்தல் மற்றும் தராதர அங்கீகாரமளித்தல் பிரிவானது மீண்டும் ஒருமுறை நாடு பூராவும் தனது செயற்பாட்டினை மிகவும் உன்னதமான முறையில் மேற்கொண்டுள்ளது. அவ்வாறே, ஒழுங்கீனங்கள் உட்பட பல குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கு தர உத்தரவாதம் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயற்பாடுகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவினால் வுஏநுவு ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக திட்டங்கள் சில தயாரிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தின் திருத்த முன்மொழிவுகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு முடியாமல் போயுள்ள போதிலும் புதிய முறையில் 2021 இல் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில்மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எட்டுதல் மற்றும் சேவைகளை வழங்குதல் என்பவற்றிற்கு முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

ஆணைக்குழுவின் வழிநடத்தும் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து இதுவரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற உதவிகளிற்கு நான் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



**பேராசிரியர் தயந்த விஜேசேகர**

**தலைவர்**

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஆனது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டமூலத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டமூலத்தினால் திருத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அடிப்படையான செயற்பாடுகளாவன கொள்கை மற்றும் திட்டங்களை வகுத்தல், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான தரத்தினை பேணுவதல், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்கல் தொடர்பாக முறைகளை பேணுதல் என்பனவாகும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு அவசிய திறன்மிக்க தொழிலாளர் வளத்தினை வழங்குவதற்கு அவசிய திட்டங்களை தயாரித்தல் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளாகும். இங்கு, தொழிற்துறையின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் ஆணைக்குழு உறுப்பினர்களிடையில் தொழில்வழங்குநர் சங்க பிரதிநிதிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் மிகவும் கௌரவிக்கப்படல் வேண்டும்.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 89 நபர்களுடன் கூடிய அதன் அலுவலர்களின் மேம்பாட்டிற்காக வெவ்வேறு செயற்பாடுகளை 2020 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ளதுடன் சேவைக்குரிய பயிற்சி பாடநெறிகள் அலுவலர்களிற்கு வழங்கப்பட்டுமுள்ளது. இவ் வருடத்தில் பிரசித்தமான விளம்பரங்களின் மூலம் அவசியமானதும் மற்றும் அனுமதிக்கப்பட்டதுமான பதவிநிலைகளிற்காக அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவகத்தின் நிதி முன்னேற்றத்தினை கருத்திற்கொள்ளும் போது 2020 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிற்காக ரூபா 131 மில்லியன்களும் மற்றும் மூலதன செலவினங்களிற்காகரூபா 5.25 மில்லியன்களும் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் ரூபா 28.5 மில்லியன்கள் மொத்த வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகளில்100மூஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக உபயேகிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மற்றும் தீர்மானம் மிக்க செயற்பாடுகளிடையில் 2019 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட கொள்கை சட்டகத்திற்கு அமைவான இலங்கையின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான ஐந்து வருட அபிவிருத்தி திட்டத்தின் (2021 - 2025) தயாரிப்பினை குறிப்பிடமுடியும் என்பதுடன் 2020 ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளி நபர்களிற்கான திறன்கள் கணிப்பீடு தொடர்பான விசேட முறை மற்றும் நெகிழ்வான கற்றல் முறை (FLM) என்பவற்றினை அறிமுகம் செய்தமை போன்றவற்றினையும் குறிப்பிடமுடியும்.

கோவிட் 19 நிலைமையினை எதிர்நோக்கி நிறுவக பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் என்பவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளிடையில் 319 நிறுவகங்களை பதிவு செய்தமை மற்றும் 453 நிறுவகங்களின் பதிவுகளை புதுப்பித்தமை ஆகியவை பாராட்டத்தக்கவையாகும். மேலும், 604 பாடநெறிகளிற்கு புதிதாக தராதர அங்கீகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளதுடன் 623 புதுப்பிக்கப்பட்டுமுள்ளன.

இவ் வருடத்தில் 39 தேசிய தேர்ச்சி நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 26 எண்ணிக்கையானவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், ஏனைய சமனான மற்றும் சமாந்தர பாடநெறிகளின் பொருட்டு 1742 சமன் செய்தல் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் அரசின் மொழி கொள்கைக்கு இணங்க மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளமென்பிரதிகளை இலவசமாக தரவிறக்கம் செய்வதற்கு இடமளித்துள்ளமை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானமாகும்.

தொழிற்துறையுடனான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலான செயற்பாடுகள் இவ் வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் திறன்கள் துறைசார் சபைகளின் (Sector Council) செயற்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினை ஸ்தாபித்தல் ஓர் முக்கிய செயற்பாடாகும். துறைசார் சபைகள் ஊடாக அந்தந்த தொழிற்துறைசார் தொழில்முயற்சியாளர்களின் கருத்துகளிற்கு இணங்க தொழிற்துறை மற்றும் தொழிற்பயிற்சி என்பவற்றினை இணைத்தல் தொடர்பாக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் கணிப்பீடு மற்றும் தர நிர்ணய முறைகளை மேலும் வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிதாக139 NVQ கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 145 பேரின் கணிப்பீட்டு அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுமுள்ளன. கணனிமயப்படுத்தப்பட்ட எழுமாற்றான கணிப்பீட்டாளர் நியமிக்கப்படுதல் முறைமையினை ஸ்தாபித்தல் 2020 ஆம் ஆண்டில் எமக்கு கிடைக்கப்பெற்ற வெற்றியாகும். அறிவுசார் கணிப்பீட்டு முறைமையினால் NVQ சான்றிதழின் தரத்தினை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல் இவ் வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடநெறிகள் மற்றும் கணிப்பீடுகள் ஆகியன இடம்பெறாமையினால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் எண்ணிக்கை 47,621 ஆகும்.இச் சான்றிதழ்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டளவில் 30,000 வரையில் குறைவானதாகும்.

2020 ஆம் ஆண்டில் எமது துறையில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடானது அதிகரித்துள்ளதுடன் தொலைதூர கல்வி,முறைப்படுத்தப்பட்ட கலவை முறை (Blended Learning) ஆகியவை தொடர்பாக 2008 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பயிற்சி பாடநெறி கணிப்பீட்டு முறை நாளாதுவரையாக்கப்பட்டுள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி உலக திறன்கள் தினத்தினை முன்னிட்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் (EFC) ஆகியவற்றுடன் இணைந்து திறன்கள் அனுமதிப்பத்திரத்தினை (Skills Passport) கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் வெளியீடு செய்வதற்கு முடிந்துள்ளது.

தொழிலாளர் சந்தை தகவல்களை முறைப்படுத்தப்பட்ட முறையூடாக வழங்குதல் இவ் வருடத்தில் இடம்பெற்றது. 160,933 எண்ணிக்கையான தொழில்வாய்ப்பு விளம்பரங்களிற்குரிய தகவல்களை பகுப்பாய்வு செய்யப்பட்டு சாராம்சப்படுத்தப்பட்டுள்ளது. 6000 பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய TVET Guide இனை வெளியீடு செய்தலானது முறைப்படுத்தப்பட்ட முறையூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு மிகவும் கஸ்டமான வருடமாக காணப்பட்ட போதிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் உயர் தரமொன்றினை எட்டுவதற்கும் முடிந்துள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்வதுடன் இதற்காக பங்களிப்புகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் அமைச்சு ஆகியோரிற்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

**ஜானக ஜெயலத்**
**பணிப்பாளர் நாயகம் (பதில்)**

## 1.0 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்விச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் ஓர் நியதிச்சட்ட அமைப்பாக 1999 ஆம் ஆண்டு திசெம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் தொழிற்படுகின்றது..

**எமது ஆணைக்குழுவின் பொது குறிக்கோள்கள் பின்வருமாறு:**

(அ) பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை முறைமையை திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(ஆ) சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும்

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர் நிறுவகங்கள் மற்றும் ஏனைய சகல ஸ்தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி நியமங்களைப் பேணல்.

## 2.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக் கட்டமைப்பு

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் இவ்வாணைக்குழு 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவர் அடங்கலாக உறுப்பினர்கள் 17 பேரை கொண்டுள்ளது.

**2020 ஆம் ஆண்டில் இருந்த உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:**

**சட்டமூலத்தின் சரத்து 6 (1) (ஒ) இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் தயந்த எஸ் விஜேசேகர அவர்கள்<br>மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | - | தலைவர் |
| 2. | பேராசிரியர்.ரீ.எம்.பந்துல பாலவத்த அவர்கள்<br>கொளரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| 3. | கலாநிதி சேனக தெவெந்திர பிலபிட்டிய அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 4. | எம்.ஜீ.கே.பர்ணாந்து அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 5. | திருமதி கிரி'ாந்தி வீரக்கோன் அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 6. | திரு.பீ.ஏ.டீ.ஆர்.சந்திரசிறி அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 7. | திரு.கனீ'க வீரசிங்க அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 8. | பேராசிரியர் திருமதி என். ஆர்.அபேநாயக்க அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 9. | திரு ஜயந்த விஜேசிங்க அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 10. | திரு மஞ்சுள த சில்வா அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி | - | உறுப்பினர் |
| 11. | பேராசிரியர் கபில பெரேரா அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி<br>(கல்வி அமைச்சின் செயலாளர் பதவிற்கு நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் 2020.08.17 ஆம் திகதியன்று ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார்) | - | உறுப்பினர் |
| 12. | பேராசிரியர் சுதந்த லியனகே அவர்கள்<br>கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி<br>(பேராசிரியர் கபில பெரேரா அவர்கள் பதவி விலகியமையினால் ஏற்பட்ட வெற்றிடத்தினை நிரப்பும் பொருட்டான புதிய நியமனம) | - | உறுப்பினர் |

**சட்டமூலத்தின் 6 (1) (அ) தொடக்கம் (ஒ) வரையான சரத்துகளிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்**

அ) திரு. ஆர்.டீ.எஸ். குமாரரத்ன அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
2020.06.01வரை

திரு. ஜானக ஜெயலத் அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம் (பதில்)
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
2020.06.01 இலிருந்து

ஆ) திரு. தரங்க நளீன் கம்லத் அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை

இ) திரு. தமித விக்கிரமசிங்க அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

ஈ) திருமதி பீ.என்.கே. மலலசேகர அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

உ) கலாநிதி கே.எல்.ஜயரத்ன அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்

ஊ) திருமதி சீதா விமலசூரிய அவர்கள் - உறுப்பினர்
நிதி அமைச்சு
திறைசேரியின் பிரதிநிதி

## 3.0 ஆணைக்குழுவின் பதவியணி

இவ்வாணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர் நாயகம் கடமையாற்றுகிறார். அவரது உதவிக்காக பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் நால்வர் (04) மற்றும் பிரதி பணிப்பாளர்கள்/ உதவி பணிப்பாளர்கள் இருபத்தைந்து பேர் (25) அடங்கலாக 89 பேர்களைக் கொண்ட பதவியணியொன்றினூடாக ஆணைக்குழுவின் பணிகள் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. அதற்கமைய, இவ்வாணைக்குழுவின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் பின்வரும் பிரிவுகளின் கீழ் அதன் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- நிர்வாகம் மற்றும் நிதிப் பரிவு
- திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
- நிறுவக பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு
- தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு
- மக்கள் தொடர்பு (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரிவு
- தேசிய தொழிற்தகைமை பிரிவு
- தகவல் முறைமைகள் பிரிவு
- சட்ட பிரிவு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீடுகளிற்கமைவாக இவ்வாணைக்குழுவிற்காக 116 பேர் கொண்ட பதவியணியொன்று அனுமதிக்கப்பட்டிருப்பினும் 2020.12.31 அன்று இவ்வாணைக்குழுவில் 89 பேர் கொண்ட பதவியணியொனறு இருந்தது. பதவியணியினரின் விபரங்கள் வருமாறு:

### அட்டவணை 3.1 ஆணைக்குழுவின் பதவியணி விபரம் - 2020

| | பதவியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | 2020.12.31 ஆம் திகதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 01 | 00 |
| 2 | பிரதி பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 3 | பணிப்பாளர் | 07 | 05 |
| 4 | தொழிலாளர் சந்தை பகுப்பாய்வாளர் | 01 | 01 |
| 5 | பிரதி/ உதவி பணிப்பாளர் | 29 | 25 |

| | பதவியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | 2020.12.31 ஆம் திகதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 | பிரதி பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை) | 01 | 01 |
| 7 | உதவி பணிப்பாளர் (சட்டம்/பணிப்பாளர் சபை செயலாளர்) | 01 | 01 |
| 8 | பிரதி பணிப்பாளர் (நிதி) | 01 | 01 |
| 9 | புள்ளிவிபரவியலாளர் | 01 | 01 |
| 10 | பிரதி பணிப்பாளர் (தகவல் சேவை) | 01 | 01 |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| 12 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) | 01 | 01 |
| 13 | நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் | 06 | 06 |
| 14 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 17 | 10 |
| 15 | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 01 | 00 |
| 16 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 01 |
| 17 | கணனி பிரயோக உதவியாளர் | 06 | 03 |
| 18 | முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு I/ வகுப்பு II/ வகுப்பு III) | 16 | 10 |
| 19 | தகவல் உதவியாளர் | 01 | 00 |
| 20 | சாரதி (வகுப்பு I/ வகுப்பு II/ வகுப்பு III) | 14 | 12 |
| 21 | அலுவலக செயற்பாட்டு உதவியாளர் | 07 | 07 |
| | **மொத்தம்** | **116** | **89** |

2020.07.10 ஆம் திகதியன்று முகாமைத்துவ உதவியாளர் பதவியில் கடமை புரிந்த திரு. நளின் த சில்வா அவர்கள் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக பதவியுயர்வினை பெற்றுள்ளதுடன் 2020.08.28 ஆம் திகதியன்று முகாமைத்துவ உதவியாளர் பதவியில் கடமை புரிந்த திரு.டபில்யூ.பீ. சுமிந்த அருணகீர்த்தி அவர்கள் உதவி பணிப்பாளர் பதவியிற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

உதவி பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளர், கணனி பிரயோக உதவியாளர், அபிவிருத்தி அலுவலர், தகவல் உதவியாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் போன்ற பதவிகளின் பொருட்டு 2020.10.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட பிரசித்தமான விளம்பரங்களிற்கு இணங்க கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் குறும் பட்டியலிடும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

## 4.0 நிர்வாகம் மற்றும் நிதி பிரிவு

இப்பிரிவு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் மற்றும் செயற்றிறன் மிக்கதாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான மனிதவளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை முகாமை செய்தல் உள்ளடங்கலான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்பாடுகளை நிறைவேற்றிவருகின்றது.

மனிதவள முகாமைத்துவத்திற்கமைவாக பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழு தனது அதிகார வரம்புகளிற்கு உட்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களிற்கு நியமனங்களை வழங்கியுள்ளது.

### 4.1 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பதவியுயர்வுகள்

| பெயர் | | பதவி | நியமன திகதி |
|---|---|---|---|
| 1 | கலாநிதி. அஜித் குசும் பொல்வத்த அவர்கள் | பணிப்பாளர் (தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு) | 2020.02.28 |
| 2 | திரு.ஆர்.என்.பீ. த சில்வா அவர்கள் | நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் | 2020.07.10 |
| | திரு.டபில்யூ.ஜீ.சுமிந்த அருணகீர்த்தி அவர்கள் | உதவி பணிப்பாளர் | 2020.08.28 |

### 4.2 2020 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பதவிகளிலிருந்து விலகியவர்கள்

| பெயர் | | பதவி | சேவையிலி-ருந்து விலகிய திகதி |
|---|---|---|---|
| 1 | செல்விகே.டீ.அமரசிங்க அவர்கள் | கணனி பிரயோக உதவியாளர் | 2020.01.09 |
| 2 | செல்வி எச்.ஏ.டீ.டீ. நயனகாரி அவர்கள் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2020.11.02 |

## 4.3 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட தற்காலிக / பதில் கடமை புரிதல் தொடர்பான பதவிகளுக்காக ஆணைக்குழு அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

| பெயர் | | புதில் கடமை/ தற்காலிக கடமை பதவி | திகதி |
|---|---|---|---|
| 1 | திரு.ஜே.ஏ.டீ.ஜே.ஜெயலத் அவர்கள் | பணிப்பாளர் (நிர்வாகம்) - பதில் | 2020.02.10-2020.05.31 |
| 2 | திரு.ஜே.ஏ.டீ.ஜே.ஜெயலத் அவர்கள் | பணிப்பாளர் நாயகம் - பதில் | 2020.06.01 |
| 3 | திரு. மஞ்சுள விதானபத்திரண அவர்கள் | பணிப்பாளர் (தொழிற்துறைசார் தொடர்புகள்) - பதில் | 2017.03.16 |
| 4 | திருமதி ஏ.எஸ்.அமரசிங்க அவர்கள் | பணிப்பாளர் (நிர்வாகம்) - தற்காலிக | 2020.06.01 -2020.07.09 |
| 5 | திருமதி ஏ.எஸ்.அமரசிங்க அவர்கள் | பணிப்பாளர் (நிர்வாகம்) - பதில் | 2020.07.10 |

## 4.4 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி

ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களின் விடயம் தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்கில் அலுவலர்களை உள்நாட்டு பயிற்சிகள் / மாநாடுகள் என்பவற்றுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2020 ஆம் ஆணடு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் உள்நாட்டு பயிற்சிகள் / மாநாடுகளில் பங்குபற்றிய அலுவலர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | | பிரிவு | பதவி | பாடநெறியின் பெயர் | நிறுவகம் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. ஜீ.சீ.ஜகத் த சில்வா அவர்கள் | உள்ளக கணக்காய்வு மற்றும் விசார-ணை பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | உள்ளக கணக்காய்வு அலுவலர்களின் கடமைகள் | SSDP | 1 நாள் |
| 2 | செல்வி பீ.எல்.ஐ.ஏ.எஸ். த சொய்சா அவர்கள் | உள்ளக கணக்காய்வு மற்றும் விசார-ணை பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | உள்ளக கணக்காய்வு அலுவலர்களின் கடமைகள் | SSDP | 1 நாள் |

| பெயர் | | பிரிவு | பதவி | பாடநெறியின் பெயர் | நிறுவகம் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 3 | திரு. யூ. கே. பிரியந்த தர்மசேன அவர்கள் | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 4 | திருமதி நிலூக்கா ராஜபக்ஷ அவர்கள் | நிறுவக பதிவு, தாரதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 5 | திரு வஜிர விஜேரத்ன அவர்கள் | தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 6 | திரு. நதீஷ. த சில்வா அவர்கள் | தகவல் முகா-மைத்துவ முறைமைகள் பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 7 | திருமதி எச்.பீ.சீ. கந்தபாங்கொட அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |

| பெயர் | | பிரிவு | பதவி | பாடநெறியின் பெயர் | நிறுவகம் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 8 | திருமதி அனு'ா குமாரி த சில்வா அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 9 | திருமதி ஜீ.சத்துரி உபேக்'ா அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு | உதவி பணிப்பாளர் | Competency and expertise through learning and un learning in the work place Assessment for Year 2021 | B.H.S. Suraweera Charted Engineer | 1 நாள் |
| 10 | திருமதி அனு'ா த சில்வா அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு | உதவி பணிப்பாளர் | Master In Labour Relation and Human Resource Management | University of Colombo | 2 ஆண்டுகள் |
| 11 | திருமதி கீ.டீ.எஸ். காரியவசம் அவர்கள் | சட்ட பிரிவு | உதவி பணிப்பாளர் | Master In Labour Relation and Human Resource Management | University of Colombo | 2 ஆண்டுகள் |

## 4.5 வெளிநாட்டு மாநாடுகளில் பங்குபற்றல்

2019 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற அழைப்பிதழ்களின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநாடுகளில் பங்குபற்றியிருந்தனர்.

## 4.6 வருடாந்த தொழில் அங்கத்துவக் கட்டணத்தை மீளச் செலுத்தல்

இவ்வாணைக்குழுவில் பணியாற்றும் அலுவலர்களின் அங்கத்துவ கட்டணத்தினை தொழில்சார் நிறுவகங்களுக்கு செலுத்துதல் தொடர்பாக அவர்களின் வருடாந்த அங்கத்துவக்கட்டணங்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

1. **திரு.ஜே.ஏ.டீ.ஜே.ஜெயலத் அவர்கள்** - பிரதி பணிப்பாளர் நாயகம்
   பிரித்தானியா கணனி சமூகம்
   இலங்கை கணனி சமூகம்

2. **பீ.ஏ.எம்.யூ.கனேபொல அவர்கள்** - பணிப்பளார் (தகவல் முறைமை)
   இலங்கை பட்டய தொழில் முகாமையாளர் நிறுவகம்

3. **திருமதி. ஏ.எஸ். அமரசிங்க அவர்கள** - பிரதி பணிப்பாளர்
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம்
   சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

4. **திரு. ஆர். ஜே. சமரவீர அவர்கள்** - பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வுமற்றும்விசாரணை பிரிவு)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம்
   சான்றளிக்கப்பட்டவியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

5. **திரு. எஸ். யூ. கே. ரூபசிங்க அவர்கள்** -
   பணிப்பாளர் (பாடநெறி பதிவு தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள்)
   இலங்கை பட்டய பொறியிலாளர் நிறுவகம்

6. **திரு. வஜிர பெரேரா அவர்கள்** - பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிபிரிவு)
   இலங்கை பட்டயமுகாமைத்துவ நிறுவகம்அரச இரசாயனவியல் சங்கம் - ஐக்கிய இராட்சியம்

7. **கலாநிதி எச்.எம்.ஏ.டீ.கே.ஹேரத் அவர்கள்** - உதவி பணிப்பாளர்
   இலங்கை கணனி சமூகம்

8. **பீ.டீ.ஸ்.காரியவசம் அவர்கள்** - உதவி பணிப்பாளர்
   உயர் நீதிமன்றம்

9. **எம்.பீ.ஐ.சம்பத் அவர்கள்** - நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்
   இலங்கை முகாமைத்துவ நிறுவகம்

## 4.7 நிதி செயற்றிறன்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான நிதி ஏற்பாடுகள் திறைசேரியின் மூலம் வழங்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டு தொடர்பாக ஆணைக்குழுதனது செலவினங்களை கீழ்வருமாறு மதிப்பீடு செய்திருந்தது.

மீண்டுவரும் செலவினம் தொடர்பாக ரூபா 151 மில்லியன்கள்

மூலதன செலவினம் தொடர்பாக ரூபா5.65 மில்லியன்கள்

2020 ஆம் ஆண்டில் திறைசேரியினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளில் ஆணைக்குழுவின் மீண்டுவரும் செலவினங்களிற்காக ரூபா 131 மில்லியன்களும் மற்றும் மூலதன செலவினங்களிற்காக ரூபா 5.25 மில்லியன்களும் விடுவிக்கப்பட்டிருந்தது.

**2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு.**

| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் (ரூபா) | உண்மையான வருமானம் (ரூபா) |
|---|---|---|
| நிறுவக பதிவு வருமானம் | 2,000,000.00 | 2,517,800.00 |
| நிறுவக தராதர அங்கீகாரம் மற்றும் கணிப்பீடு | 2,000,000.00 | 1,522,900.00 |
| சான்றிதழ் வெளியீடு | 5,075,000.00 | 2,794,330.00 |
| சான்றிதழ் தயாரிப்பு | 4,000,000.00 | 1,281,500.00 |
| தேசிய தொழிற்தகைமை சான்றுப்படுத்தல் | 500,000.00 | 415,000.00 |
| பரீட்சை கட்டணம் | 25,000,000.00 | 17,772,251.00 |
| பாடத்திட்ட விற்பனை | 700,000.00 | 418,050.00 |
| மாணவர் அறிக்கை புத்தக விற்பனை | 2,500,000.00 | 981,187.00 |
| கணிப்பீட்டு கட்டணம் | 350,000.00 | 86,250.00 |
| இதர புத்தக விற்பனை | 200,000.00 | 1,600.00 |
| தர முகாமைத்துவ முறைமை சான்றளித்தல் | 1,000,000.00 | 741,600.00 |
| **மொத்த வருமானம்** | **43,325,000.00** | **28,532,468.00** |

## 4.8 உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகள்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குரிய கணக்காய்வு மற்றும் விசாரணை ஆகிய அலுவல்கள் இவ்வாணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னைய வருடங்களில் இவ் உள்ளக நிர்வாக முறைகளின் போதுமான தன்மையானது, சுற்றுநிருப ஆலோசனைகளிற்கும் மற்றும் ஆணைக்குழுவின் சட்டமூலம் மற்றும் ஆணைக்குழுவிற்கு பொருந்தக்கூடிய ஏனைய சட்ட திட்டங்கள் ஆகியவற்றிற்கு உட்படுதல் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு நிதி மற்றும் செயற்றிறன் தொடர்பான உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை செயற்பாடு உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க முன்நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகள் வேலைத்திட்டத்திற்கு அமைவாக திட்டமிடப்பட்ட 06 பிரதான கணக்காய்வு பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை திட்டத்திற்கு அமைவாக திட்டமிடப்படாத கணக்காய்வு விசாரணைகளும் உள்ளக கணக்காய்வில் பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிப்புரையின் பெயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் விசாரணை அலுவல்கள் மற்றும் புதிய கொள்கைகளை பிரேரணை செய்தல் அல்லது மாற்றம் செய்தல் என்பவை இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் நிறைவேற்றப்படுவதுடன், இவ்வாணைக்குழு முறைமைகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை மிகக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்வதற்கு அவசியமான அலுவல்கள் சம்பந்தப்பட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2020 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டங்களை (கோவிட் 19 இனால் குழு கூட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டன) நடாத்தப்பட்டுள்ளதுடன் அச் சந்தர்ப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ தீர்மானங்கள் ஆணைக்குழுவிற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

i. உள்ளக கணக்காய்வு திட்டத்தினை செயற்படுத்துதல்

ii. நிதி அறிக்கையினை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்கள்

iii. வருடாந்த செயற்பாட்டு திட்டம் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்கள்

iv. ை கணக்காய்வு மற்றும் விசாரணைகளின் வினைத்திறன்

v. ஆணைக்குழுவின் செயற்றிறன் தொடர்பான மீளாய்வு மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள்

vi. கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை மீளாய்வு

vii. ஏனைய இயக்க மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான பல்வேறுபட்ட முகாமைத்துவ தீர்மானங்கள்

இதற்கிணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அடங்கலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்ளை உள்ளடக்கியிருந்தது.

**I. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அடங்கலாக கீழ்வரும் அங்கத்தவர்களை கொண்டிருந்தது.**

- திருமதி விமலவீர அவர்கள் - குழு தலைவர் - பணிப்பாளர் நாயகம் (நிதி அமைச்சு)
- திரு. எம். பீ. கே. எம். பர்ணாந்து அவர்கள் - குழு உறுப்பினர்
- திருமதி எம்.டீ.எம். குமாரி அவர்கள் - அவதானிப்பாளர் - உள்ளக கணக்காய்வாளர் (திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு)
- திருமதிஎல். ஏ. எஸ். குணசேகர அவர்கள் - அவதானிப்பாளர்- கணக்காய்வு அதிகாரி - (அரச கணக்காய்வு திணைக்களம்)

**ii. 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அடங்கலாக கீழ்வரும் அங்கத்தவர்களை கொண்டிருந்தது.**

- திருமதி விமலவீர அவர்கள் - குழு தலைவர் - பணிப்பாளர் நாயகம் (நிதி அமைச்சு)
- திரு.எம்.பீ.கே.எம்.பர்ணாந்து அவர்கள் - குழு உறுப்பினர்
- திரு தரங்க நளின் கம்லத் அவர்கள் - குழு உறுப்பினர் - தலைவர் (தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை)
- திருமதிஎல்.ஏ.எஸ்.குணசேகர அவர்கள் - அவதானிப்பாளர்கணக்காய்வு அதிகாரி - (அரச கணக்காய்வு திணைக்களம்)
- திரு. எஸ்.சீ.ஜகத் அவர்கள் - அவதானிப்பாளர் - பிரதம உள்ளாய்வு கணக்காய்வாளர் திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு

## 4.9 சட்டம் சார்ந்த அலுவல்கள்

### சட்டத்தைச் திருத்தம் செய்தல் தொடர்பான முன்னேற்றம்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலத்தில் 1990 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்கள் பதிவுகளை மேற்கொள்வதனை நெறிப்படுத்துவதற்கு அவசியமான வகையிலான சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தினை சேர்த்துக்கொள்வதன் முக்கியத்துவமானது அடையாளம் காணப்பட்ட பின்னர் உரிய சட்டமூலத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியன 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டமூலத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையினால் அவ்விருதரப்பினரினதும் பங்குபற்றலுடன் உரிய கலந்துரையாடலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அமைச்சின் அனுசரணையுடன் சில தடவைகள் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திருத்தப்பட்ட வரைவு தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனோடிணைந்ததாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வரைவானது முன்வைக்கப்படவில்லை என்பதுடன் அவ் வரைவின் தேவைப்பாடு தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. அதற்கிணங்க, அமைச்சின் அனுசரணையுடன் இரண்டு நிறுவகங்களினதும் வரைவுகளை ஒன்றாக அதாவதுஅனைத்து தரப்பினர்களின் (அமைச்சு, TVEC மற்றும் NAITA) பங்குபற்றலுடன் TVEC மற்றும் NAITA வரைவுகளை ஒருமித்ததாக கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நிறைவுபெற்றுள்ள வழக்கு நடவடிக்கை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் நடாத்தப்பட்டுவரும் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பவற்றிற்கிடையில் காணப்படும் Writ 94/2019 வழக்கில் உரிய நிறுவகங்கள் மற்றும் மாணவர்கள் இடையில் பாடநெறியினை நடாத்துதல் மற்றும் அதன் தரம் ஆகியவை தொடர்பான முரண்பாடொன்று ஏற்பட்டிருந்தது.இவ் வழக்கில் நடுநிலையாளராக செயற்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் விசேட கடமையான ஒழுங்கமைக்கும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, தரப்பினர் இடையில் முரண்பாடற்ற முறையில் வழக்கு செயற்பாட்டினை சமரசம் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டது.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நிறுவகங்களில் பாடநெறிகள் தொடர்பான தராதர அங்கீகாரங்களிற்கு அவசிய நிதியுதவிகளை வழங்கும் செயற்பாட்டின் கீழ் நிதியுதவியினை பெற்றுக்கொண்ட தரப்பினரான HICMA தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த DMR 2675 2019 வழக்கு நடவடிக்கையின் மூலம் உரிய நிதியினை நிறுவகத்திடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## பதிவு செய்யப்படாத மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

ஆணைக்குழுவில் பதிவினை மேற்கொள்ளாமல் பயிற்சிகளை நடாத்திவரும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்கள் பதிவுசெய்வதனை ஆணைக்குழுவானது சட்டரீதியான அனுமதியின் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

அதற்கிணங்க, பத்திரிகை வாயிலான விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலமும் பதிவினை மேற்கொள்ளாத பயிற்சி நிறுவகங்களிற்கு தெளிவூட்டும் கடிதங்களை அனுப்பிவைப்பதன் மூலமும் அந்தந்த நிறுவகங்களிற்கு பதிவினை மேற்கொள்வதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தியதுடன் இதுவரையில் 2020 ஆம் ஆண்டில் இவ்வாறான 50 கடிதங்கள் வரையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 25 நிறுவகங்கள் இதுவரையில் இது தொடர்பாக சாதகமான பதில்களை காட்டியுள்ளன.அவ்வாறே, பதிவு செய்யப்படாத தொழிற்பயிற்சி நிறுவகங்களின் வர்த்தக விளம்பரங்கள் மற்றும் ஏனைய தகவல்களை வெளியீடு செய்யும் போது ஒப்பாய்வு செய்து வெளியீடு செய்யுமாறு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் நிறுவகங்களிற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆணைக்குழு கூட்டங்களை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உதவி பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றுகின்றார். 2020 ஆம் ஆண்டில் 09 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 5.0 திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பிரதான தொழிற்பாடானது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது குறிக்கோளான இலங்கையின் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற் கல்வி திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உயிர்பான பங்களிப்புகளை வழங்குவதாகும். திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

- ஒவ்வொரு துறைகள் தொடர்பாகவும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- இலங்கையில் மாகாண அடிப்படையில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்
- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கையினை தயாரித்தல் மற்றும் அதனை நாளதுவரையாக்கல்
- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறைசார் ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அபிவிருத்தித் திட்டத்தினை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்
- ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுசெயற்றிறன் அறிக்கைகளைத் தயாரித்தல் அவற்றிற்குரிய மீளாய்வுகளை செயற்படுத்துதல

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் மூன்று (03) பேர் கொண்ட பதவியணியொன்று காணப்படுகின்றது. இப்பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), உதவிப் பணிப்பாளர் ஒருவர் (01), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01) கடமைபுரிகின்றனர்.

அதற்கிணங்க, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் 2020 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன

## 5.1 தேசிய அபிவிருத்தி திட்டம்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவினால் பாராளுமன்ற சட்டமூலத்திற்கு அமைவாக அபிவிருத்தி திட்டத்தினைதயாரிக்கும் செயற்பாடு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது.இது தொடர்பாக 06 அணிகளை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு 06 தலைப்புகளின் கீழ் உரிய திட்டமானது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், இச் செயற்பாட்டின் போது சுபீட்சமான நோக்கம் தொடர்பான கொள்கை, நீண்டகால அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals) தேசிய தொழிற்பயிற்சி கொள்கை மற்றும் மத்திய வங்கி அறிக்கை முன்மொழிவுகள் மற்றும் தேசிய தொழிற்தகைமை செயற்பாட்டு கைநூல், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலம் மற்றும் திருத்தப்பட்ட சட்டமூலம் ஆகியன அடிப்படையான ஆவணங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.இத் தேசிய அபிவிருத்தி திட்டமானது தொழிற்பயிற்சி துறைசார் முக்கிய கோட்பாடாகும். இது செல்லுபடியாக்கம் (ஏயடனையவழைஒ)செய்யப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 05 ஆண்டுகளிற்கு இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### அபிவிருத்தி திட்டத்தின் முகப்பு அட்டை



## 5.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைதயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி தேவைப்பாடுகளை கண்டறிவதற்காக தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில் மின் மற்றும் இலத்திரனியல் துறை தொடர்பான பயிற்சி திட்டத்தின் நாளாதுவரையாக்கல் செயற்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளது.அதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடு 5.2. (a) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்மாகாணத்திற்கான மாகாண அடிப்படையிலான பயிற்சி திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்,2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது அரைகுறையாக நிறைவுசெய்யப்பட்டுள்ளமையினால் அது தொடர்பான செயற்பாடுகளைநிறைவு செய்தல் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### a) மின் மற்றும் இலத்திரனியல் துறைசார் பயிற்சி திட்டத்தினை நாளாதுவரையாக்கம் செய்து தயாரித்தல்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை நாளாதுவரையாக்கம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் மின் மற்றும் இலத்திரனியல் துறைசார் திட்டத்தின் நாளதுவரையாக்கல் 2020 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான கோரிக்கை மற்றும் நிதியுதவி ஆகியவற்றினை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) மேற்கொண்டிருந்தது.

இதற்காக வெளிவாரி பயிற்றுநர் குழுவொன்றின் பங்குபற்றலானது ஏற்பாடு செய்யப்பட்டது. இத் திட்டத்தினை தயாரிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 1.73 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் இவ் அறிக்கையினை வெற்றிகரமாக நிறைவு செய்து செல்லுபடியாக்கம் (validation) மேற்கொள்ளும் செயலமர்வும் நடாத்தப்பட்டது. மேலும் இது தொடர்பான கள அலுவலர்களை வரவழைத்து அவர்களிடத்தில் முன்வைக்கும் (Launching) வேலைத்திட்டத்தினை 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை அச்சிட்டு பிரதிகளை உரிய நிறுவகங்களிற்கு விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



**திட்டத்தினை செல்லுபடியாக்கம் பயிற்சி செய்யும் செயலமர்வின் புகைப்படம்**




மின் மற்றும் இலத்திரனியல் பயிற்சி திட்டத்தின் முகப்பு அட்டை

## 5.3 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் ஆராய்ச்சி சிற்றறை (Research Cell) ஆனது நடாத்தப்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சி முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் பயன்பாட்டின் நிமித்தம் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு ஆராய்ச்சிச் சிற்றறையால் முன்வைக்கப்பட்ட பணிகள் அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளன.

### 5.3.1 புதிய ஆராய்ச்சிக் கற்கைகள்

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களிடமிருந்து ஆராய்ச்சிகள்அடங்கலான சிறு திட்டங்கள் தொடர்பானமுன்மொழிவுகள் கோரப்பட்டன. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் போன்றவற்றினை செயற்படுத்துவதில் நிலவிய குறைபாடுகள் இனங்காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் ஆய்வுகளிற்கு மேலதிகமாக குறுகிய திட்டங்களை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறுகிய திட்டங்களின் நிறைவில் தொழிற்கல்வி துறைசார்

பிரச்சினைகளிற்கான தீர்வுகளை குறுகிய காலத்தில் எட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.அதற்கமைய, பல்வேறு நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக 11 ஆராய்ச்சி முன்மொழிவுகளும் மற்றும் 02 குறுகிய கால திட்டங்களும் ஆராய்ச்சி சிற்றறையிற்கு கிடைக்கப்பெற்றன.

அவற்றில் 2020 ஆம் ஆண்டில் 04 ஆய்வுகளையும் மற்றும் 01 குறுகிய கால திட்டத்தினையும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அம் முன்மொழிவுகள் ஆராய்ச்சி வழிநடத்தும் செயற்குழுவினால் (Research Steering Committee) மதிப்பீடு செய்யப்பட்டதன் பிற்பாடு துறைக்கு உகந்த, காலத்திற்கேற்ற 04 ஆராய்ச்சி கற்கைகள் மற்றும் 01 குறுகிய திட்டம்ஆகியவை தொடர்பான அனுமதிகள் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.இவ் ஆராய்ச்சி கற்கைகளின் தரத்தினை பேணும் பொருட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிநடத்துதல் மற்றும் அவசிய ஆலோசனைகளை வழங்குதல் போன்றவை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை மற்றும் ஆராய்ச்சி குழு ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதற்காக ரூபா 2.0 மில்லியன் நிதி பங்களிப்பானது திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பாகவும் ஒதுக்கப்பட்ட செலவினங்கள் கீழே அட்டவணை 5.4 இல் காட்டப்பட்டுள்ளது.

மேலும் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டு அவ் ஆய்வுகள் தொடர்பான சாராம்சங்களை உள்ளடக்கிய சிறு புத்தகமொன்று (Booklet) தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை 5.4 (திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி கற்கைகள் - 2020)**

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி நோக்கம் | ஆராய்ச்சி குழு | அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா) | 2020 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | குருணாகல் மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு நவீன கையடக்கத் தொலைபேசிகளின் ஆதிக்கம் தொடர்பான கற்கை | ● குருணாகல் மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு நவீன கையடக்கத் தொலைபேசிகளின் ஆதிக்கம் தொடர்பான கற்கை<br>நோக்கங்களாவன,<br>● தொழிற்பயிற்சியினை தொடருகின்ற மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக ஸ்மாட் கையடக்கத் தொலைபேசிகளை எவ்வளவு தூரம் பயன்படுத்துகின்றனர் என்பதனை அடையாளங்காணல்<br>● தொழிற்பயிற்சியினை தொடரும் மாணவர்களிற்கு ஸ்மாட் கையடக்கத் தொலைபேசியின் பயன்பாட்டினால் ஏற்படும் பிரச்சினைகளை அடையாளங்காணல்<br>● ஸ்மாட் கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டினால் ஏற்படும் பிரச்சினைகளிற்கான பரிந்துரைகளை அடையாளங்காணல் | தொழிற்பயிற்சி அதிகாரசபை | 205,000.00 | 61,500.00 |

| வ.எண் | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி நோக்கம் | ஆராய்ச்சி குழு | அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா) | 2020 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | | • தொழிற்பயிற்சி கல்வியினூடாக கையடக்கத் தொலைபேசிகளை செயற்திறன் மிக்கதாக பயன்படுத்துவதற்கான யோசனைகளை முன்வைத்தல் | | | |
| 2. | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி பிரிவினை சார்ந்த பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புகளில் மென்திறன்களின் தாக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு | • தொழில்வாய்ப்பு தொடர்பாக மிகவும் பொருத்தமான மென்திறன் பகுதிகளை அடையாளங்காணல்<br>• மென்திறன் பகுதிகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பினை பகுப்பாய்வு செய்தல்<br>• தொழில்வாய்ப்பு தொடர்பாக மென்திறன் பகுதிகளின் தாக்கங்களை கண்டறிதல்<br>• பட்டம், டிப்ளோமா ஆகியவற்றிற்கு அவசிய மென்திறன்களில் கருத்திற்கொள்ளக் கூடியளவிலான வேறுபாடு உள்ளதா என்பதனை கண்டறிதல். | சமுத்திர பல்கலைக்கழகம் | 259,700.00 | 77,700.00 |

| இ.இ | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி நோக்கம் | ஆராய்ச்சி குழு | அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா) | 2020 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 3. | இலங்கை சூழலினை கருத்திற்கொண்டு சமுத்திர லாஜிஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பான தொழிற்பயிற்சியினை பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றிய கற்கை | சமுத்திரம் சார்ந்த பயிற்சி மற்றும் மீன்பிடி துறைசார் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களில் பெண்கள் நுழைவதல் மற்றும் பங்குபற்றுதல் ஆகியன தொடர்பான செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பற்றிய மீளாய்வு<br>● பயிற்சி மற்றும் கல்வி தொடர்பாக பெண்களின் நுழைவினை அதிகரித்தல்<br>● கடந்த 10 வருடங்களில் சித்தியடைந்த ஆண் மற்றும் பெண் மாணவர்களின் தொழில் நிலைமைகளை கண்டறிதல்<br>● மீன்பிடி மற்றும் கடல்சார் பிரிவுகள் பற்றிய தொழிற்கல்வி தொடர்பாக பெண்களின் கூடிய பங்குபற்றல் பற்றிய முடிவுகள் மற்றும் யோசனைகளை முன்வைத்தல் | சமுத்திர பல்கலைக்கழகம் | 83,000.00 | 24,900.00 |

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி நோக்கம் | ஆராய்ச்சி குழு | அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா) | 2020 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 4. | இறுதி கணிப்பீடு மற்றும் திறன்மிக்க தீர்வுகள் ஆகியவை தொடர்பாக பயிலுநர்களின் பங்குபற்றல் தொடர்பாக முக்கியமான தீர்மானம் மிக்க காரணிகள் பற்றிய கற்கை | • பயிலுநர்களிடையில் சாதாரண காரணிக-ளின் தாக்கங்களை விசாரிப்பதற்கு VTA இன் கட்டிட மற்றும் நிர்மாண துை-றசார் பாடநெறிகள் தொடர்பான இறுதி மதிப்பீட்டிற்கு பங்குபற்றுவதற்கு முடிதல்.<br>• பயிலுநர்களிடையில் செய்முறை காரணிளின் தாக்கங்ளை அடையாளங்காணல்<br>• பயிலுநர்களின் விருப்பு காரணிகளின் தாக்கங்களை அடையாளங்காணல் | தொழிற்பயிற்சி அதிகாரசபை | 200,000.00 | 60,000.00 |
| **கண்டறிதல்** | | | | | |
| 5 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (வீ.ரீ.ஏ) போதனா-சிரியர்களின் செயற்றிறன் மதிப்பீட்டு முறைமை-யொன்றினை அடையாள-ங்காணும் திட்டம் | • தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஆசிரியர்கள் / போதனாசிரியர்கள் இடையில் போட்டி மிக்க நிலைமையினை ஏற்படுத்தல்<br>• தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஆசிரியர்கள் / போதனாசிரியர்கள் தொடர்பாக வினைத்திறன் மிக்க செயற்றிறன் மதிப்பீட்டு முறையொன்றினை அறிமுகம் செய்தல் | தொழிற்பயிற்சி அதிகாரசபை | 150,000.00 | 45,000.00 |

| இ | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி நோக்கம் | ஆராய்ச்சி குழு | அனுமதிக்-கப்பட்ட நிதி (ரூபா) | 2020 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | | • நாட்டினுள் அல்லது சர்வதேச ரீதியில் குறிப்பிட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஈடுபடவைக்கும் போது இம் முறை ஊடாக பக்கச்சார்பற்ற முறையினை அடையாளங்காண முடிதல். | | | |
| **மொத்தம்** | | | | **897,000.00** | **269,100.00** |

2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூபா 2 மில்லியன்கள் திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதித்தொகையில் 50% இனை செலவு செய்வதற்கு முடிந்துள்ளது. மிகுதித் தொகை ஆராய்ச்சிக் கற்கைகள் நிறைவடைந்தவுடன் 2021 ஆம் ஆண்டில் செலவு செய்யப்படும்.

### 5.3.2 வருடாந்த செயற்பாட்டு திட்டம் - 2019 (AIP 2019)

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் மூலம் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டு திட்டமானது தயாரிக்கப்படடு அதிலுள்ள திட்டங்கள் தொடர்பாக அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடி அதற்காக ஆணைக்குழுவின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட முறையில் வருடாந்த செயற்பாட்டு திட்டமானது தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட முன்னேற்றங்கள் அடங்கலான மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகள் உரிய காலத்தில் அமைச்சின் மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 5.3.3 தேசிய தொழிற்தகைமை மட்டங்கள் தொடர்பாக சம்பள நிர்ணய நிபந்தனைகளை தயாரித்தல்

இதன் கீழ், 2020 ஆம் ஆண்டில் தொழிலாளர் சந்தை தகவல்கள், மத்திய வங்கி அறிக்கை, தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள தொழிற்பயிற்சி திட்டம் மற்றும் சம்பளங்களை தயாரித்தல் தொடர்பான இணையத்தளம் ஆகியவற்றினை ஆய்வு செய்து தேசிய தொழிற்தகைமை மட்டங்கள் தொடர்பான சம்பள நிபந்தனைகள் தயாரித்து பிரதி தொழில் ஆணையாளர் மற்றும் அதன் உறுப்பினர்கள்மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியோரால் கூட்டாக தயாரிக்கப்பட்ட அறிக்கையானது தொழில் ஆணையாளர் நாயகம் அவர்களின் அனுமதியின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக கொண்ட கூட்டங்கள் 05 நடாத்தப்பட்டுள்ளன.

## 6.0 பாடநெறிகளை பதிவு செய்தல், தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தி திட்டம் (1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 887/8 ஆம் இலக்க அரச வர்த்தமானி) என்பவற்றிற்கமைவாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாகவும் கீழே தரப்பட்டுள்ளவாறு நான்கு படிமுறைகளில் தரத்தினை பாதுகாக்கும் செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன

01. தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

02. பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல்

03. தர முகாமைத்துவ முறைமைகளை ஸ்தாபித்தல்

04. தர மேம்பாட்டு முறைமையினை ஸ்தாபித்தல் (QIS)

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக இப்பிரிவானது 12 பேர் கொண்ட பதவியணியொன்றினை கொண்டிருப்பதுடன் இப்பதவியணியில் பணிப்பாளர் ஒருவர், பிரதிப் பணிப்பாளர்கள் இருவர், உதவிப் பணிப்பாளர்கள் இருவர், நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இருவர், அபிவிருத்தி அலுவலர்கள் இருவர், முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் மற்றும் அலுவலக உதவிப் பணியாளரொருவர் உள்ளடங்கியுள்ளனர்.

### 6.1. தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

தொழிற்பயிற்சியினை வழங்கும் பயிற்சி நிறுவகங்கள் இவ்வாணைக்குழுவின் கீழ் பதிவு செய்தல் சட்டரீதியான தேவைப்பாடாகும். அதற்கிணங்க,நாட்டில் செயற்பட்டுவரும் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்களும் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.மேற்கூறப்பட்ட சட்டமூலத்திற்கு அமைவாக, நிறுவகமொன்றினை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளின் போதுமான தன்மை, பயிற்சி உபகரணங்கள் மற்றும் அவற்றின் போதுமான தன்மை, பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கல் முறை, பாடத்திட்டத்தின் போதுமான தன்மை ஆகிய பிரமாணங்கள் தொடர்பாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அப் பிரமாணங்களினை பூர்த்தி செய்யும் பட்சத்தில் குறித்த நிறுவகமானது இரண்டு வருட காலப்பகுதிக்கு ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்படும். 2020 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் புதிதாக பதிவினை மேற்கொள்ளும் பொருட்டு 730 பயிற்சி நிறுவகங்களில் பதிவு செய்வதற்கான மதிப்பீடுகளை நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 772 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடுகளிற்கு உட்படுத்தப்பட்டன.

**பயிற்சிநிறுவக பதிவு தொடர்பாக மதிப்பீடு செய்தல் தொடர்பான விபரங்கள் (புதிய மற்றும் நாளாதுவரையாக்கல்) வகைப்படுத்தலிற்கு இணங்க கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| | நிறுவகங்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | புதிய பதிவுகள் | பதிவுகளை புதுப்பித்தல் | |
| (இலக்கிடப்பட்ட) மதிப்பீட்டு எண்ணிக்கை | 250 | 480 | 730 |
| கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 257 | 490 | 747 |
| மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை (2019 இல் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுடன் கூடியதாக) | 319 | 453 | 772 |

**2020 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் அவற்றின் நிறுவக உரிமை அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளன.**

| நிறுவகங்கள் உரிமை அடிப்படையில் | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (புதிய) | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (நாளாதுவரையாக்கல்) |
|---|---|---|
| அரச நிறுவகம் | 05 | 80 |
| நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம் | 25 | 83 |
| தனியார் | 149 | 207 |
| **மொத்தம்** | **179** | **370** |

2020 ஆம் ஆண்டின் இறுதியில் 1239 தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக பதிவுகளின் செல்லுபடியான தன்மை காணப்பட்டதோடு அவை தொடர்பான தகவல்கள் நிறுவக உரிமை அடிப்படையில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| நிறுவகங்கள் உரிமை அடிப்படையில் | பதிவு செல்லுபடியாகும் எண்ணிக்கை |
|---|---|
| அரச நிறுவகங்கள்/ நியதிச்சட்ட/ கூட்டுத்தாபனங்கள் | 570 |
| தனியார்/ அரச சார்பற்ற நிறுவகங்கள் | 669 |

**பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகங்களிற்கு நிறுவக பதிவுகளை உறுதிப்படுத்துதல் தொடர்பான கடிதங்களை அளித்தல்**

தொழிற்பயிற்சி மத்தியநிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட சான்றிதழாளர்கள் வெளிநாடு செல்வதற்காக உரிய பயிற்சி நிறுவகத்தின் பதிவினை உறுதி செய்யும் கடிதமானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்படுவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான 415 கடிதங்கள் 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது..

## 6.2 NVQ சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரங்களை அளித்தல்

இலங்கையில் தேசிய தொழிற்தகைமை சட்டகமானது 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த தொழிலொன்றின் பொருட்டு NVQ தகைமையினை விருதளிப்பதற்காக தேசிய தேர்ச்சி நியமமானது தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத் தேசிய தேர்ச்சி நியமங்களிற்கு இணங்க தேசிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் அப் பாடத்திட்டத்திட்டங்களிற்கு இணங்க தேர்ச்சி அடிப்படையிலான முறையின் கீழ்பயிற்சி செயற்பாடுகள் இடம்பெறும் பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரத்தினை அளித்தல் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாடநெறி தராதர அங்கீகார மதிப்பீடுகள் தொடர்பான எண்ணிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பாடநெறிகள் ஊடாக பயிற்சியினை பெறும் பயிலுநர்களிற்கான இறுதி கணிப்பீடானது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பெறுபேறுகளிற்கு அமைவாக NVQ தகைமைகள் விருதளிக்கப்படுகின்றன.

| | பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | புதிய | நாளாதுவரையாக்கல் | |
| இலக்கிடப்பட்ட மதிப்பீட்டு எண்ணிக்கை | 300 | 400 | 700 |
| கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 524 | 572 | 1096 |
| தராதர அங்கீகார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை | 604 | 623 | 1227 |

**2020 ஆம் ஆண்டில் இவ் ஆணைக்குழுவின் மூலம் தராரதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை 982 ஆகும் என்பதுடன் அவை உரிமை அடிப்படையில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.**

| நிறுவக வகை உரிமை அடிப்படையில் | பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை | பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை (நாளாதுவரையாக்கல்) |
|---|---|---|
| அரச நிறுவகம் | 326 | 339 |
| நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம் | 78 | 35 |
| தனியார் | 141 | 63 |

## 6.3. தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை (QMS) நிறுவுதல் மற்றும் சான்றுப்படுத்துதல

தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பாக வெளிவாரி தர கணக்காய்வுகள் இவ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த வெளிவாரி தராதர அங்கீகார கணக்காய்வுகளின் எண்ணிக்கை 60 ஆகும் என்பதுடன் அதன் மூலம் 36 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 19 பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 19 நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமைகள் நாளாதுவரையாக்கம் செய்யப்பட்டுமுள்ளன. கீழே தரப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிற்கு தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பான சான்றளிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### முகாமைத்துவ முறைமையினை புதிதாக ஸ்தாபித்தல்

1. யுனைட்டட் ட்ரெக்டர் மற்றும் இக்குவிப்மண்ட் கம்பனி - வத்தளை
2. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - ரிகில்லகஸ்கட
3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - பொல்கொல்ல
4. தொழிற்பயிற்சி அதிகாரசபை - கொதட்டுவ
5. தொழிற்பயிற்சி அதிகாரசபை - இராஜகிரிய
6. தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம் - கொழும்பு 05
7. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை - கொழும்பு 05
8. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - நீர்கொழும்பு
9. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை - அல்பிட்டிய பிரதேச பயிற்சி மத்திய நிலையம்
10. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை - பத்தேகம
11. தொழிற்பயிற்சி அதிகாரசபை - பொல்கஹாவெல
12. இலங்கை கால்நடை வளர்ப்பு வித்தியாலயம் - குண்டசாலை
13. இலங்கை இளைஞர் தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - தெகிவளை
14. யீளுளுஇன்டர்ன'னல் நெட்வேர்க் பிரைவெட் லிமிட்டெட் - கொழும்பு 06
15. அலுவலக மொழி மற்றும் தொழிற்கல்வி தனியார் நிறுவகம் - பத்தரமுல்ல
16. தொழிற்பயிற்சி அதிகாரசபை - கதுருவெல
17. டில்மா சலூன் மற்றும் அழகுக்கலை மத்தியநிலையம் - அங்கொட
18. தொழிற்பயிற்சி அதிகாரசபை - சீதாவக்கை
19. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை - தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் நிறுவகம் - கண்டி

## முகாமைத்துவ முறைமையினை நாளாதுவரையாக்கல்

1. பல்கலைக்கழக கல்லூரி - குளியாப்பிட்டிய
2. மாவட்டதொழிற்பயிற்சி மத்திய நிலையம் - கண்டி
3. இலங்கை விவசாய கல்லூரி - வவுனியா
4. மாவட்டதொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வேயாங்கொட
5. பொறியியல் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - கட்டுப்பத்த
6. ரெக்சாஸ் ந'னல் மொன்ரிசோரி அன்ட் ரீச்சர் ரெயினிங் சென்ரர் - நாரஹேன்பிட்டி
7. இலங்கை விவசாய கல்லூரி - லபுதுவ
8. தொழில்நுட்ப கல்லூரி - மாத்தறை
9. தொழில்நுட்ப கல்லூரி - பண்டாரவளை
10. லலித் அத்துலத்முதலி தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - இரத்மலானை
11. தொழில்நுட்ப கல்லூரி - மட்டக்களப்பு
12. இலங்கை விவசாய கல்லூரி - குண்டசாலை
13. பல்கலைக்கழக கல்லூரி - யாழ்ப்பாணம்
14. தொழில்நுட்ப கல்லூரி - கேகாலை
15. தொழில்நுட்ப கல்லூரி - கம்பஹா
16. டொன்பெஸ்கோ தொழில்நுட்ப மத்தியநிலையம் - நீர்கொழும்பு -
17. மாவட்டதொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மின்னேரியா
18. இலங்கை விவசாய கல்லூரி - பிபில
19. மாவட்டதொழிற்பயிற்சி மத்திய நிலையம் - அனுராதபுரம்

இதற்கும் மேலதிகமாக, பயிற்சி மத்தியநிலையத்தில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பாக தெரியப்படுத்தும் ஒருநாள் செயலமர்வுகள் 03 நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக தொழிற்பயிற்சி நிறுவகத்தினை சேர்ந்த அலுவலர்கள் 120 பேர் வரையில் பங்குபற்றியிருந்தனர்.

2019 ஆம் ஆண்டில் 04 அலுவலர்கள் டூடுநயன யுரனவைழசளரூஇலங்கை கட்டளைகள் நிறுவகத்தில் கணக்காய்வுக்கான தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது தொழில் கணக்காய்வாளர்களுக்கான தேவைகள் காணப்படுவதுடன் அதற்கிணங்க கணக்காய்வாளர்பட்டியலில் 35 பேர் உயிர்ப்பான நிலையில் உள்ளனர். அதற்காக மேலும் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 6.4 தர மேம்பாடு தொடர்பான முறைமையினை (QIS) ஸ்தாபிக்கும் செயற்பாடு மற்றும் சான்றளிப்பு

2016 ஆம் ஆண்டில்தர மேம்பாட்டு முறைமை டூஞரயடவைல ஐஅிசழளநஅநவெ ளுலளவநஅரூஎன்ற பெயரிலான புதிய நுழைவு ஒன்று வுஏநுஊ இனால் திறன்கள் துறைசார் அபிவிருத்தி திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் கூடியதாக அறிமுகம் செய்யப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் 90 இலும் கூடிய நிறுவகங்கள் தொடர்பாக ஞஐளு சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் 232 நிறுவகங்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் ஆணைக்குழு நிறுவக பதிவு மற்றும் பாடநெறி தராதர அங்கீகாரம் மற்றும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளின் மூலம் சம்பாதித்த நிதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| பயிற்சி மத்திய நிலைய பதிவுக்கட்டண வருமானம் | - | ரூபா | 2,517,800.00 |
| தராதர அங்கீகார கட்டண வருமானம் | - | ரூபா | 1,522,900.00 |
| மாணவர் அறிக்கை புத்தக விற்பனை (Student Record books) | - | ரூபா | 981,187.00 |
| தர முகாமைத்துவ (QMS) சான்றிதழ் பத்திர விநியோகம் | - | ரூபா | 741,600.00 |
| பயிற்சி நிறுவக பதிவினை உறுதி செய்யும் கடிதம் | - | ரூபா | 415,000.00 |
| **மொத்தம்** | **-** | **ரூபா** | **6,178,487.00** |

இவ் வருமானத்தினை கருத்திற்கொண்டு வருடாந்த வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## 7.0 தேசிய தேர்ச்சி நியமம், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

**7.1 தேசிய தொழிற்தகைமை சட்டகத்தினை செயற்படுத்துவதற்காக தொழில்களுக்குரிய தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் என்பவற்றினை தயாரிப்பது பிரதான தேவைப்பாடாகும். அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை செல்லுபடியாக்கம் செய்யப்பட்டுள்ளன.**

**7.1.1 தொழிற்துறைசார் திறன்கள் சபைகள் மூலம் முன்மொழியப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 39 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ்வருமாறு.**

- பயிற்றுவிப்பாளர் (விளையாட்டு) மட்டம் 4
- சாரதி மட்டம் 3
- விளையாட்டு பயிற்றுவிப்பாளர் (உடற் தகுதி) மட்டம் 4
- கடல்சார் காய்ச்சி இணைப்பவர் மட்டம் 4
- இயந்திர இயக்குநர் (அரிசி ஆலை) மட்டம் 4
- தாய் மற்றும் சேய் உதவியாளர் மட்டம் 4
- குழு உறுப்பினர் (பீட்ஷா) மட்டம் 4
- கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு கைவினைஞர் மட்டம் 4
- எம்பாம் மேற்கொள்பவர் மட்டம் 4
- சாரதி உதவியாளர் மட்டம் 2
- மின் தொழில்நுட்ப உதவியாளர் மட்டம் 2
- சுகாதார பாதுகாப்பு மற்றும் உபசரிப்பு உதவியாளர் மட்டம் 2
- விளையாட்டு, உடற்தகுதி மற்றும் நீர் மத்திய நிலைய உதவியாளர் மட்டம் 2
- போக்குவரத்து உதவியாளர் மட்டம் 2
- ஆடை தயாரிப்பாளர் (Outfit Maker) மட்டம் 2
- ஆரம்ப குழந்தை அபிவிருத்தி உதவியார் மட்டம் 2
- தொடர்பாடல் உதவியாளர் மட்டம் 2
- வாகன உராய்வு நீக்கும் சேவையாளர் மட்டம் 2/3
- சமூக சுகாதார உதவியாளர் மட்டம் 2/3
- உதவி பங்களா காப்பாளர் மட்டம் 3

- பேரிடர் ஆபத்தினை குறைக்கும் உதவியாளர் மட்டம் 3
- போதைப்பொருள் நிவாரண உதவியாளர் மட்டம் 3
- மீன்பிடி பொருட்களை திருத்தம் செய்யும் உதவியாளர் மட்டம் 3
- கால்நடை வள உதவியாளர் மட்டம் 3
- சூழல் பாதுகாப்பு உதவியாளர் மட்டம் 3
- கால்நடை காப்பாளர் மட்டம் 3/4
- யானை பாகன் மட்டம் 3/4
- போக்குவரத்து உதவியாளர் மட்டம் 3
- நீர்வள காப்பாளர் மட்டம் 3/4
- தன்னியக்கவாகன காப்பாளர் (Automative Derain) மட்டம் 4
- நடன கலைஞர் மட்டம் 3/4
- கடதாசி மீள்சுழற்சி தொழில்நுட்பவியலாளர் மட்டம் 3/4
  (மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக)
- Computer Numerrically Controlled Manufacturing Technology மட்டம் 5
- இரண்டாம் மொழியாக ஆங்கில மொழியினை கற்பித்தல் மட்டம் 5
- மருந்து தயாரிப்பு தொழில்நுட்பவியல் மட்டம் 5
- பெருந்தோட்ட விஸ்தரிப்பு முகாமைத்துவம் மட்டம் 5
- ஜவுளி தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவம் மட்டம் 5
- திரவ சக்தி தொழில்நுட்பவியல் (ஹைட்ரோலிக் மற்றும் நியூமட்ரிக்) மட்டம் 5
- கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியல் மட்டம் 5/6

### 7.1.2 புதிய தேசிய தேர்ச்சி நியமங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்ட தொழில்கள் கீழ்வருமாறு.

- ஜவுளி மற்றும் ஆடை தயாரிப்பு தொழில்நுட்பவியல் மட்டம் 5

### 7.1.3 புதிய பாடத்திட்டங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்ட தொழில்கள் கீழ்வருமாறு

- கடலுணவு தொழில்நுட்பவியல மட்டம் 5/6

**7.2 கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்களை நாளாதுவரையாக்கியதன் பின்னர் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அவற்றினைநடைமுறைப்படுத்தும் பொருட்டு செல்லுபடியாக்கம் செய்துள்ளது.**

**7.2.1 நாளாதுவரையாக்கப்பட்ட 26 தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ் வருமாறு.**

- மோட்டார் வாகன காய்ச்சி இணைப்பவர் மட்டம் 3/4
- வரவேற்பு அலுவலர் மட்டம் 4
- வழங்கல் செயற்பாடு (களஞ்சிய நிர்வாகம்) மட்டம் 3/4
- முதலுதவியாளர் மட்டம் 4
- பழங்கள் மற்றும் காய்கறி பரிகரிப்பு கைவினைஞர் மட்டம் 3/4
- ஆய்வுகூட உதவியாளர் மட்டம் 3/4
- மின் உயர்த்தி தொழில்நுட்பவியலாளர் மட்டம் 3/4
- தொழில்நுட்ப இலத்திரனியல் கைவினைஞர் மட்டம் 3/4
- அழகுக் கலை நிபுணர் மட்டம் 2
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பெற்றோலியம்) மட்டம் 2
- உள்வீட்டு நிர்வாக உதவியாளர் மட்டம் 2/3
- கள உதவியாளர் (விவசாயம்) மட்டம் 3
- சுப்பர் மார்க்கட் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் மட்டம் 2
- கட்டுமான கைவினைஞர் மட்டம் 2
- குழாய் பொருத்துதல் உதவியாளர் மட்டம்2
- உணவக சேவையாளர/ ஸ்ருவெட் மட்டம் 2
- அழகுக்கலை நிபுணர் மட்டம் 3/4
- வெதுப்புநர் (பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி) மட்டம் 3/4
- மோட்டார் வாகன தொழில்நுட்ப கைவினைஞர் மட்டம் 2/3
- மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் கைவினைஞர் மட்டம் 4
- முகாமைத்துவ சேவை அலுவலர் மட்டம் 4
- முகாமைத்துவ சேவை உதவியாளர் மட்டம் 3
- இயந்திர கைவினைஞர் மட்டம் 3/4
- உபசரிப்பு முகாமைத்துவம் மட்டம் 6
- கணக்கீடு மட்டம் 5/6
- பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பவியல் மட்டம் 5/6

### 7.2.2 தேர்ச்சி நியமங்கள் மாத்திரம் நாளதுவரையாக்கப்பட்ட தொழில்கள் கீழ்வருமாறு.

- அதிவேக தையல் இயந்திர இயக்குநர் மட்டம் 2/3

### 7.2.3 பாடத்திட்டங்கள் மாத்திரம் நாளதுவரையாக்கப்பட்ட தொழில்கள் கீழ்வருமாறு.

- வடிவமைப்பு நிர்மாண கைவினைஞர் மட்டம் 3/4
- விவசாய உற்பத்தி தொழில்நுட்பவியல் மட்டம் 5/6

## 7.3 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்ட மொழிபெயர்ப்பு செயற்பாடுகள

### 7.3.1 சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட 42 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ் வருமாறு.

- சுகாதார பாதுகாப்பு மற்றும் உபசரிப்பு உதவியாளர்
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர்
- சுப்பர் மார்க்கட் வாடிக்கையாளர் சேவை உதவியாளர்
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பெற்றோலியம்)
- ஆடை வடிவமைப்பு கைவினைஞர்
- பாரவூர்தி இயக்குநர்
- மீன்பிடி பொருட்களை திருத்தும் உதவியாளர்
- பாதுகாப்பு அலுவலர்
- வழங்கல் செயற்பாடு (களஞ்சிய நிர்வாகம்)
- சாரதி
- உதவி பங்களா காப்பாளர்
- கள உதவியாளர் (விவசாயம்)
- பால் சேகரிப்பு மத்திய நிலைய உதவியாளர்
- பேரிடர் ஆபத்தினை குறைக்கும் உதவியாளர்
- போதை பொருள் நிவாரண உதவியாளர்
- கால்நடை உதவியாளர்
- கட்டிட வர்ணம் பூசுபவர்

- பழங்கள் மற்றும் காய்கறி பரிகரிப்பு கைவினைஞர்
- போக்குவரத்து உதவியாளர்
- தாதி உதவியாளர்
- ரேலர்
- விலங்கு காப்பாளர்
- மோட்டார் வாகன மின் தொழில்நுட்பவியலாளர்
- சமூக சுகாதார உதவியாளர்
- தச்சுச் தொழிலாளர் (தளபாடம்)
- தாய் சேய் உபசரிப்பு வழங்குநர்
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்
- நீர் வளர்ப்பு காப்பாளர்
- குழந்தை உபசரிப்பு வழங்குநர்
- யானை பாகன்
- இயந்திர இயக்குநர் (அரிசி ஆலை)
- வரவேற்பு அலுவலர்
- மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்
- ஆய்வுகூட உதவியாளர்
- குருதி எடுப்பவர் (Phlebotomist)
- மோட்டார் வாகன காய்ச்சி இணைப்பவர்
- உணவக உதவியாளர்
- காய்ச்சி இணைப்பவர்
- நடன கலைஞர்
- பயிற்றுவிப்பாளர் (விளையாட்டு)
- ஆரம்ப குழந்தை அபிவிருத்தி மத்திய நிலைய உதவியாளர்
- குழு உறுப்பினர் (பீட்ஷா)

### 7.3.1.2 தேசிய தேர்ச்சி நியமங்கள் மாத்திரம் சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட 13 தொழில்கள் கீழ்வருமாறு

- குழந்தை பராமரிப்பு மத்தியநிலைய இயக்குநர்
- உலர்ந்த இரப்பர் தயாரிப்பு இயந்திர தொழில்நுட்பவியலாளர்
- உலர்ந்த இரப்பர் தயாரிப்பு இயந்திர இயக்குநர்
- இயந்திர நெசவு கைவினைஞர்
- உயிர் காத்தல் தொழில்

- டயில் பதிப்பவர்
- மணமக்களை அலங்கரிப்பவர்
- மின் தொழில்நுட்பவியலாளர்
- ஹோமியோபதி மருத்துவம்
- மருந்து தொழில்நுட்ப கைவினைஞர்
- உற்பத்தி உதவியாளர் (இலத்திரனியல் ஊடகம்)
- கணனி பிரயோக உதவியாளர்
- அழகுக்கலை நிபுணர்

### 7.3.1.3 பாடத்திட்டங்கள் மாத்திரம் சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தொழில்கள் கீழ்வருமாறு

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- அதிவேக தையல் இயந்திர தொழில்நுட்பவியலாளர்

### 7.3.2 கீழே தரப்பட்டுள்ள 28 தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

- குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி தொழில்நுட்ப கைவினைஞர்
- ஆடை வடிவமைப்பு கைவினைஞர்
- வரவேற்பு அலுவலர்
- உபசரிப்பு வழங்குநர் (சுகாதார பாதுகாப்பு மற்றும் உபசரிப்பு உதவியாளர்)
- தாய் சேய் உபசரிப்பு வழங்குநர்
- கட்டுமான வேலைத்தள மேற்பார்வையாளர்
- தரையினை அழகுபடுத்தும் உதவியாளர்
- அதிவேக தையல் இயந்திர இயக்குநர்
- போதை பொருள் நிவாரண உதவியாளர்
- காய்ச்சி இணைப்பவர்
- விலங்கு பொறுப்பாளர்
- யானை பொறுப்பாளர்/ யானை விவசாயி
- சூழல் பாதுகாப்பு உதவியாளர்
- உதவி பங்களா பொறுப்பாளர்
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பெற்றோலியம்)
- சமூக சுகாதார உதவியாளர்
- உபசரிப்பு வழங்குநர்
- பேரழிவு ஆபத்தினை குறைத்தல் உதவியாளர்

- பாதுகாப்பு அலுவலர்
- மீன்பிடி பொருட்களை திருத்தும் உதவியாளர்
- உணவக உதவியாளர்/ ஸ்டுவட்
- மருந்து தொழில்நுட்ப கைவினைஞர்
- குருதி எடுப்பவர் (Phlebotomist)
- குழு அங்கத்தவர் (பீட்ஷா)
- இயந்திர இயக்குநர் (அரிசி ஆலை)
- எம்பாம் செய்பவர்
- உபசரிப்பு வழங்குநர்
- மோட்டார் வாகன வர்ண தொழில்நுட்பவியலாளர்

### 7.3.2.2 தேசிய தேர்ச்சி நியமங்கள் மாத்திரம் தமிழ் மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட 09 தொழில்கள் கீழ்வருமாறு

- உலர்ந்த இரப்பர் தயாரிப்பு இயந்திர தொழில்நுட்பவியலாளர்
- உலர்ந்த இரப்பர் தயாரிப்பு இயந்திர இயக்குநர்
- ஹோமியோபதி மருத்துவம்
- கால்நடை வள உதவியாளர்
- வாகன உராய்வு நீக்கல் சேவையாளர்
- குழந்தை பராமரிப்பு மத்தியநிலைய இயக்குதல்
- உதவி தயாரிப்பாளர்
- வானொலி அறிவிப்பு கலைஞர்
- ஊடகவியலாளர் (அச்சு ஊடகம்)

## 7.4 தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளின் தகைமைகளை தேசிய தொழிற் தகைமைகளுக்கு சமன் செய்தல்

### 7.4.1 தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளை பயின்ற விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் தகைமைக்கு சமமான சான்றிதழ்களை அளிக்கும் பொருட்டு தொழில் மீளாய்வு பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் சித்தியடைந்தவர்களுக்கு தேசிய தொழிற்தகைமைகளுக்கு சமன் செய்யப்பட்ட சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

| பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்தகைமை மட்டம் | அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்) | மட்டம்5 | 04 |

**7.4.2 தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழாளர்களிற்கு சமமான தேசிய தொழிற்தகைமையினை விருதளிப்பதற்கு பத்திரிகை விளம்பரமொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அறிவினை பரீட்சிக்கும் பொது பரீட்சையானது 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு அதில் சித்தியடைந்தவர்களிற்கு தொழில் மீளாய்வு பரீட்சையானது இவ் வருடத்தில் நடாத்தப்பட்டதோடு அதில் சித்தியெய்தியவர்களிற்கு தேசிய தொழிற்தகைமையிற்கு சமன் செயயப்பட்ட சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், இச் சான்றிதழ்களை மீண்டும் சான்றுப்படுத்துவதற்காக பல நிறுவகங்கள் மூலம் முன்வைக்கப்பட்ட 53 கோரிக்கைகள் தொடர்பாக சான்றுப்படுத்தும் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.**

| பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்தகைமை மட்டம் | அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம் மற்றும் தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்) | மட்டம் 5 | 1408 |
| தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (கணிய அளவையியல்) | மட்டம் 5 | 306 |

**7.4.3 மேலும் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்கள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமைகளிற்கு சமன் செய்யப்பட்ட சான்றிதழ்களை விநியோகிக்கும் செயற்பாடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

| நிறுவகத்தின் பெயர் | பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்தகைமை மட்டம் | அளிக்கப்பட்ட சமன் செய்யப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை/ தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா | மட்டம் 5 | 10 |
| வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் | கணியஅளவை தேசிய டிப்ளோமா | மட்டம் 6 | 01 |
| பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம் | பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா | மட்டம் 6 | 06 |
| இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் | தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 6 | 03 |
| | சிவில் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 6 | 02 |
| | உணவு தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 6 | 02 |

## 7.5 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்களின் பிரதிகளைத் தயாரித்தல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்கள் ஆகியன அடங்கிய மென்பிரதிகளை கொண்ட இறுவட்டின் விற்பனையானது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இவ்வாறன 836 இறுவட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் ரூபா 418,000.00 வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்திலிருந்து இத் தேசிய தேர்ச்சி நியமங்கள்ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக இலவசமாக தரவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன

## 7.6 நிறுவகங்களுக்கு இடையில் தேசிய தொழிற்தகைமை வழிநடத்தல் குழு கூட்டங்களை நடாத்துதல்

தேசிய தொழிற்தகைமை முறைமையினை செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளை கண்டறிதல் மற்றும் கூட்டான தீர்மானங்களை எடுத்தல் மற்றும் புதிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் தேசிய தொழிற்தகைமை முறைமையானது செயற்படுத்தப்பட்டுவரும் அரச மற்றும் தனியார் நிறுவகங்களின் சிரே‍ஷ்ட அலுவலர்களை கொண்ட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இவ்வாறான குழு கூட்டங்கள் 10 மேற்கொள்ளப்பட்டன.

## 7.7 தேசிய தேர்ச்சி நியமங்களின் அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை குழு

தேசிய தொழில் நியமங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உள்ளுர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை கேள்விகளை கருத்திற்கொண்டு அனுமதியினை வழங்குதல், தேசிய தேர்ச்சி நியமங்களின் தரங்களினை பேணுதல், தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்களினை தயாரிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் ஆகியவற்றிற்கு தேசிய தேர்ச்சி நியம அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இக் குழுவின் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. உரிய தீர்மானங்கள் எடுத்தல் மற்றும் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7.8 தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளை தேசிய தொழிற்தகைமை மட்டம் 5/ 6 இற்கு சமன் செய்தல்

தேசிய தொழிற்தகைமை மட்டம் 5/6 இன் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள 02/2019 சுற்றுநிருபத்திற்கு இணங்க தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்த தேசிய தொழிற்தகைமை அல்லாத டிப்ளோமா பாடநெறிகளான NCIT (Mechanical) பாடநெறியானது NVQ மட்டம் 5 இற்கு சமனானது என உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரியதாக தேசிய தொழிற்தகைமை சுற்றுநிருப இல 02/2020 வெளியிடப்பட்டுள்ளது. மேலும், BMS நிறுவகத்தினால் விண்ணப்பிக்கப்பட்ட Bio Medical Science பாடநெறியானது சமனாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 7.9 தேசிய தொழிற்தகைமை சுற்றுநிருபம்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் தயாரிக்கப்படும் சுற்றுநிருபங்களை வெளியீடு செய்தல் இப் பிரிவின் செயற்பாடாகும். அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

- தேசிய தொழிற்தகைமை சுற்றுநிருப இல 01 கூ 2020
- மாற்றுத்திறன்மிக்க விண்ணப்பதாரிகளிற்கு உகந்த முறையில் தேசிய தொழிற்தகைமை கணிப்பீடுகளை சரிசெய்தல்
- தேசிய தொழிற்தகைமை சுற்றுநிருப இல 02 கூ 2020
- தொழிற்துறைசார் தொழில்நுட்பவியலாளர்களிற்கான தேசிய சான்றிதழ் (எந்திர பொறியியல்) பாடநெறியினை தேசிய தொழிற்தகைமை மட்டம் 05 இற்கு சமன்செய்தல்
- தேசிய தொழிற்தகைமை சுற்றுநிருப இல 03 கூ 2020
- நெகிழ்வான கற்றல் முறையில் (Flexible Learning Model) மொடியூலர் அடிப்படையிலான பயிற்சி வேலைத்திட்டத்தின் ஊடாக தேர்ச்சி அறிக்கையினை (Record of Achivement) வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள்

## 7.10 தொழில் முதிர்ச்சியுடன் கூடிய விண்ணப்பதாரிகளின் தகைமைகளை தேசிய தொழிற்தகைமை மட்டம் 05 இற்கு சமன் செய்தல்

தொழில் முதிர்ச்சியின் அடிப்படையில் தேசிய தொழிற்தகைமை மட்டம் 05 இற்கு சமன் செய்யப்பட்ட சான்றிதழினை வழங்கும் பொருட்டு விண்ணப்பித்திருந்த துறைகள் சார்பாக 15 நேர்முகத்தேர்வுகளை நடாத்தி அவற்றில் தகுதி பெற்றவர்களிற்கு 50 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

# 8.0 தர நிர்ணயம் மற்றறும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு

## 8.1 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் தேசிய தொழிற்தகைமை பிரிவு மற்றும் நிர்வாக பிரிவு மற்றும் ஏஞ சான்றிதழ் பிரிவு ஆகியவற்றினை இணைத்து தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பானது வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இப் பிரிவில் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர், நான்கு உதவி பணிப்பாளர்கள், 01 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர், 04 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 02 கணனி பிரயோக உதவியாளர்கள் உள்ளனர். இம் மனிதவளத்தினை உபயோகித்து 2020 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 8.2 தேசிய தொழிற்தகைமை முறைமையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

### 8.2.1 கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவு தளத்தினை பேணுதல்

இவ் வருடத்தில் கணிப்பீட்டு தரவுத் தளத்தில் உள்ள அனைத்து அலுவலர்களினதும் தகவல்களை நாளாதுவரையாகியதன் மூலம் கணிப்பீட்டு செயற்பாடுகளின் செயற்றிறன் மற்றும் தரம் ஆகியன உயர்வடைந்துள்ளன.

#### 8.2.1.1 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களிற்கான தேவைப்பாட்டை எதிர்வுகூறுதல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்களின் எண்ணிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தரவுத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பூகோள ரீதியான வதிவிடம் ஆகிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவைப்படும் கணிப்பீட்டாளர்கிள்ன எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

#### 8.2.1.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நபர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வினை நடாத்தல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக நியமனம் வழங்குவதற்காக அரச மற்றும் தனியார் பிரிவு நிறுவகங்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இங்கு, விண்ணப்பதாரர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு நியமிக்கப்பட்ட காலப்பகுதியொன்று காணப்படாததுடன் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களின் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல் நேர்முகத்தேர்வு குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய தொழிற்துறைசார் விசேட நிபுணத்துவமுடைய நபர்கள் இந் நேர்முகத்தேர்வு குழுவிற்கு நியமிக்கப்படுவதுடன்,2020 ஆம் ஆண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகள் 14 நாட்கள் நடாத்தப்பட்டு 31 தொழிற்துறைகள் தொடர்பாக கணிப்பீட்டாளர்கள் 614 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### 8.2.2 கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் வேலைத்திட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்

கோவிட் நிலைமை காரணமாக 08 பயிற்சியளிப்பு வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டு 101 அலுவலர்களிற்கு கணிப்பீட்டு செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 8.2.3 கணிப்பீட்டாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

2020 ஆம் ஆண்டில் 145 கணிப்பீட்டாளர்களிற்கான அனுமதிப்பத்திரங்கள் நாளாதுவரையாக்கப்பட்டுள்ளன.

### 8.2.4 தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்

இதன்கீழ் இதுவரையில் காணப்பட்ட கணிப்பீட்டாளர்களை நியமனம் செய்யும் முறையினை டிஜிட்டல் முறையில் கணிப்பீட்டாளர்களை வேகமாக நியமித்தல் மற்றும் கணிப்பீட்டினை நடாத்தும் காலப்பகுதியினை தீர்மானித்தல் ஆகியவற்றினை வசதி செய்யும் பொருட்டு கணனி மயப்படுத்தப்பட்ட முறையின் மூலம் கணிப்பீட்டாளர்களை நியமனம் செய்யும் முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இவ் டிஜிட்டல் முறையில் இதுவரையில் காணப்பட்ட பாரபட்ச மற்றும் முறைசாரா முறைகள் நீக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க,CBT, EBT, RPL மற்றும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள FLM ஆகிய 04 முறைகளிலும் கணிப்பீட்டாளர்களை நியமனம் செய்யும் பணியானது கணனி மூலமான முறையினை அடிப்படையாக கொண்ட புதிய முறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பாரபட்சமற்ற முறையில் கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்படுவதுடன் இச் செயற்பாட்டின் தரமும் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கும்.

இதன்கீழ் பின்வரும் 03 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தனியார் பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- அரச பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- சம்பந்தப்பட்ட நிறுவகங்களுடன் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

### 8.2.4.1 தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியார் துறை பயிற்சி நிறுவகங்களில் பாடநெறி தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்பட்டு அவை முடிவுறும் போது அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ்கள் விருதளிக்கப்படுகின்றன.

இங்கு, உரிய நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களைக் கொண்டு கணிப்பீடானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு, பல்வேறுவகையான பயிற்சி நிலையங்கள்.ஃ. நிறுவகங்கள் மூலம் 2020 ஆம் ஆண்டில் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற 557 விண்ணப்பங்கள் தொடர்பான கணிப்பீடுகளிற்கு கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 8.2.4.2 அரசதுறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

அரச துறைக்குரிய பயிற்சி நிறுவகங்களில்இடம்பெறும் பாடநெறிகள் தொடர்பான கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கும் செயற்பாட்டானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் தொடக்கம் நிலவிய கோவிட் 19 தொற்று நோய் காரணமாக பல கணிப்பீடுகள் பிற்போடப்பட்டதுடன் அவ்வப்போது நடாத்தப்பட்ட கணிப்பீடுகள் 386 தொடர்பாக அனுமதிகள் வழங்கப்பட்டன. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற நிறுவகங்களில் இருந்தும் மற்றும் இவ் அமைச்சிற்கு புறம்பான அரச துறை பயிற்சி நிலையங்கள்.ஃ. நிறுவகங்களில் இருந்தும் இக் கோரிக்கைகளை முன்வைக்கப்பட்டன.

### திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்குரியவை

- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்
- சமுத்திர பல்கலைக்கழகம்
- இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்
- இளைஞர் சேவைகள் மன்றம்

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சினை சாராத அரச நிறுவகங்கள்**

- இலங்கை இளைஞர் படையணி
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- விவசாய திணைக்களம்
- சமூகசேவை திணைக்களம்
- இலங்கை விமானப்படை
- இலங்கை கடற்படை

தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமைகளைஅளிப்பதற்கு மேலதிகமாக இன்னுமொரு முறையில் தகைமைகள் அளிக்கப்படுகின்றன. அதாவது, தொழிற்துறைகளில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு அனுபவம் உள்ள நபர்களுக்கு பாடநெறிகளை பயில்வதற்கு இயலாமையினால் NVQ தகைமை தொடர்பாக அவர்களுக்கு கோரிக்கையினை முன்வைக்க முடியும். அவ்வாறு அனுபவங்களை கொண்ட நபர்களுக்கு தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு NVQ சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இம் முறையானது முன்னைய அனுபவங்களை அங்கீகரித்தல் முறை (RPL) என அழைக்கப்படுகின்றது. இம் முறை மூலம் தேசிய தொழிற்தகைமைகளை விருதளிப்பதற்கு மூன்று அரச நிறுவகங்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**அவ்வாறான மூன்று நிறுவகங்களாவன,**

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

### 8.2.5 முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

அவ்வப்போது மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் வழிநடத்தும் குழு கூட்டங்களிலும் மற்றும் பரீட்சை சபை கூட்டங்களிலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றுடன் முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளன.

## 8.3 தேர்ச்சிசார்கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுதல்

### 8.3.1 தேர்ச்சிசார்கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுதல் மற்றும் கணிப்பீட்டாளர்களின் அறிவினை நாளாதுவரையாக்குதல் ஆகியன தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் ஐந்து (05) செயலமர்வுகளை மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கோவிட் 19 தொற்று நிலைமையின் காரணமாக கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பாக கணிப்பீட்டாளர்கள் அனைவரையும் அழைப்பதற்கு முடியாமையின் காரணமாக இவ் வருடத்தில் உரிய செயலமர்வுகள் நடாத்தப்படவில்லை. எவ்வாறாயினும், இவ் ஒதுக்கீட்டினை பயன்படுத்தி கணிப்பீட்டாளர்களை பயிற்றுவிக்கும் 03 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன்மூலம் கணிப்பீட்டளார் தரவுத் தளத்தினை மேலும் விஸ்தரிப்பதற்கு முடிந்துள்ளது.

### 8.3.2 அரசமற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிலையங்களில் நடைபெறும் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்தல்

கடந்த ஆண்டில்அரச மற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்பட்ட தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் 38கண்காணிப்பு செய்யப்பட்டது. இக்கண்காணிப்பு பெறுபேறுகளுக்கு அமைவாக NVQ சுற்றுநிருபம் 2017/ 01 இற்கு இணங்கவும் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனைகளிற்கு அமைவாகவும் கணிப்பீட்டு செயற்பாடுகளிற்கும் மற்றும் கோட்பாடுகளுக்கும் விரோதமான முறையில் செயற்பட்ட சந்தர்ப்பங்களில் கணிப்பீட்டாளர்களுக்கு அவசிய ஆலோசனைகளை வழங்கப்பட்டதுடன் ஏனைய உரிய ஒழுக்காற்று தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

## 8.4 முறைப்பாடுகளை விசாரித்தல்

2020 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் கணிப்பீடுகளை மேற்கொள்ளமுடியாமற் போயுள்ளமையினால் எம்மால் விசாரிக்கப்படக்கூடிய மட்டத்தில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறவில்லை.

## 8.5 அறிவினை பரிசோதிக்கும் பொது எழுத்து பரீட்சையினை நடாத்துதல்

### 8.5.1 தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 விருதளிப்பு தொடர்பாக பொது எழுத்துமூல பரீட்சையினை நடாத்துதல்

2020 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 தொடர்பாக 13 தொழில்களின் நிமித்தம் பொது எழுத்துமூல பரீட்சைகள் இம் முறை ஜனவரி மாதத்தில் நடாத்தப்பட்டன. இங்கு ஒவ்வொரு தொழில்கள் தொடர்பான பரீட்சைகளிலும் கீழே தரப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகள் தோற்றியிருந்தனர்.

**அட்டவணை 8.2.1 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது பரீட்சைகளில் பங்குபற்றிய விண்ணப்பதாரிகள்**

| துறைகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|
| தன்னியக்க வாகன கைவினைஞர் | 946 |
| வெதுப்புநர் | 743 |
| அழகுக்கலை | 3011 |
| வேலைத்தள மேற்பார்வையாளர் | 864 |
| சமையற்காரர் | 988 |
| படவரைஞர் | 1067 |
| மின்னியலாளர் | 1504 |
| சிகை அலங்கரிப்பாளர் | 2843 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைவினைஞர் | 7171 |
| தாதி உதவியாளர் | 87 |
| முன்பள்ளி ஆசிரியர் (ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி) | 1404 |
| கணிய அளவீட்டு உதவியாளர் | 691 |
| குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி கைவினைஞர் | 524 |
| **மொத்த எண்ணிக்கை** | **21843** |

**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்**

கோவிட் 19 நிலைமையின் கீழ் எழுத்துமூல பரீட்சையினை மேலும் நடாத்துவதற்கு முடியவில்லை. அனைத்து பரீட்சைகளின் பெறுபேறுகளும் இவ் வருடத்தினுள்ளேயே வெளியிடப்பட்டுள்ளன. கோவிட் 19 தொற்று நிலைமையின் காரணமாக நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த பொது எழுத்துமூல பரீட்சைகள் 2021 மார்ச் மாதம் வரையில் பிற்போடப்பட்டுள்ளன.

### 8.5.2 தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 தொடர்பான எழுத்துமூல பரீட்சைகளை நடாத்துதல்

தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 இற்குரிய பொது எழுத்துமூல பரீட்சைகள் 2020 ஆம் ஆண்டில் உரிய நிறுவகங்களின் கோரிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன.

| பொது எழுத்துமூல பரீட்சைகள் நடாத்தப்படும் தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகள் |
|---|
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் |
| கணிய அளவையியல் தொழில்நுட்பவியல் |
| கட்டுமான தொழில்நுட்பவியல் |
| அழகுசாதனவியல் |
| விவசாய உற்பத்தி தொழில்நுட்பவியல் |
| மெகாட்ரொனிக் தொழில்நுட்பவியல் |
| குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி தொழில்நுட்பவியல் |
| உற்பத்தி தொழில்நுட்பவியல் |
| முன்பள்ளி ஆசரியர் |
| அச்சிடல் தொழில்நுட்பவியல் |
| படவரைதல் தொழில்நுட்பவியல் |
| எந்திர தொழில்நுட்பவியல் |



## 8.6 கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

இதன்கீழ், கணிப்பீட்டாளர்களின் கொடுப்பனவு செயற்பாடுகள் ளுடனி வுசயளெகநச முறையிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதனால் காசோலை மூலமான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு உரிய கொடுப்பனவுகள் நேரடியாக உரிய கணிப்பீட்டாளரின் கணக்குகளிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால், இக் கொடுப்பனவுகளை சரியான முறையிலும் மற்றும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ள முடிந்துள்ளது.

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் கணிப்பீடுகள் தொடர்பாக பங்குபற்றியுள்ள கணிப்பீட்டாளர்களிற்கான கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் ஆகியவற்றினை ஆணைக்குழுவின் கணிப்பீட்டு அலகின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தலைப்பின் கீழ் கணிப்பீட்டாளர்களின் 1194 எண்ணிக்கையான உறுதிச் சீட்டுகள் தொடர்பான கொடுப்பனவுகள் கணிப்பீட்டு அலகின் மூலம் சான்றளிக்கப்பட்டு கணக்கு பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ் உறுதிச் சீட்டுகளின் மொத்த பெறுமதியானது ரூபா 14.886 மில்லியன்களாகும்.

## 8.7 தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

### 8.7.1 தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

Covid 19 தொற்று நிலைமை காரணமாக NVQ சான்றிதழ்களை விநியோகித்தல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளமையினை 2020 ஆம் ஆண்டில் அவதானிக்க முடியும். பயிற்சி மற்றும் கணிப்பீட்டு செயற்பாடுகள் குறைவடைந்துள்ளமை இதற்கு பிரதான காரணமாகும். அதற்கிணங்க, எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 50% இனை எட்டமுடிந்துள்ளது.

அதற்கிணங்க,2020 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 47,621 சான்றிதழ்களை அச்சிட்டு வழங்கியுள்ளது. அவற்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 8.7.1 அட்டவணை 8.7.1தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழாளர்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை - 2020 (நிறுவக ரீதியாக)**

| நன்மா | சான்றிதழாளர்களின் எண்ணிக்கை | | | | சான்றிதழ்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் முறை | முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் மூலமான கணிப்பீட்டு முறை | தொழிற்துறைசார் தொழிற்பயிற்சி முறை | மொத்தம் | திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் முறை | முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் மூலமான கணிப்பீட்டு முறை | தொழிற்துறைசார் தொழிற்பயிற்சி முறை | மொத்தம் |
| தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் | 7907 | 174 | 0 | 8081 | 8493 | 177 | 0 | 8670 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 1041 | 4999 | 1389 | 7426 | 1181 | 5614 | 1471 | 8266 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 11824 | 690 | 0 | 12512 | 14721 | 887 | 0 | 15608 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 1748 | 0 | 0 | 1748 | 2118 | 0 | 0 | 2118 |
| தனியார் துறை | 11555 | 7 | 0 | 11557 | 12952 | 7 | 0 | 12959 |
| **மொத்தம்** | **34075** | **5870** | **1389** | **41334** | **39465** | **6685** | **1471** | **47621** |

**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்**

2020ஆம் ஆண்டில்தேசிய தொழிறதகைமை (ஏஞ) மட்டம் 01 தொடக்கம் 06 வரையில் அச்சிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை நிறுவக ரீதியாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 8.7.2 2020 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள்**

| நிறுவகம் | முதலாவது மட்டம் | இரண்டாவது மட்டம் | மூன்றாவது மட்டம் | நான்காவது மட்டம் | ஐந்தாவது மட்டம் | ஆறாவது மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 8 | 499 | 4385 | 3374 | 0 | 0 |
| தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம் | 3 | 246 | 3332 | 3933 | 988 | 168 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 0 | 143 | 702 | 1269 | 4 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 168 | 817 | 7127 | 7285 | 211 | 0 |
| தனியார் துறை | 3 | 547 | 8943 | 2644 | 470 | 352 |
| **மொத்தம்** | **182** | **2252** | **24489** | **18505** | **1673** | **520** |

**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்**

2020 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (ஆண்.. பெண்) தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.3 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 8.7.3 2020 ஆம் ஆண்டில் விருதளிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (பாலின அடிப்படையில்)

| நிறுவகம் | சான்றிதழாளர்களின் எண்ணிக்கை | | | சான்றிதழ்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம் | 4713 | 3368 | 8081 | 5242 | 3428 | 8670 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 4628 | 2798 | 7426 | 5087 | 3179 | 8266 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 7012 | 5500 | 12512 | 8949 | 6659 | 15608 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 665 | 1083 | 1748 | 790 | 1328 | 2118 |
| தனியார் துறை | 4947 | 6610 | 11557 | 5628 | 7331 | 12959 |
| **மொத்தம்** | **21965** | **19359** | **41324** | **25696** | **21925** | **47621** |

**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டில் 273 சான்றிதழ்கள் மீளவும் அச்சிடப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.4 இல் தரப்படடுள்ளன.

## அட்டவணை 8.7.4 மீண்டும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் - 2020

| சான்றிதழ் வகை | சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| அச்சிடல் பிழைகள் காரணமாக மீளவும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் | 69 |
| தொலைந்துபோன சான்றிதழ்கள் தொடர்பாக பிரதிகளை அச்சிடல் | 204 |

**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்**


2006 ஆம் ஆண்டு தொடக்கம் விநியோகிகப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.5 2006 தொடக்கம் 2020 வரையில் வெளியீடு செய்யப்பட்ட மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை

| ஆண்டு | சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 259 |
| 2007 | 1,629 |
| 2008 | 8,915 |
| 2009 | 11,249 |
| 2010 | 13,256 |
| 2011 | 16,572 |
| 2012 | 18,111 |
| 2013 | 22,855 |
| 2014 | 28,546 |
| 2015 | 44,148 |
| 2016 | 47,017 |
| 2017 | 65,212 |
| 2018 | 61,150 |
| 2019 | 78,007 |
| 2020 | 47,621 |
| மொத்தம் | 464,457 |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

**வரைபு 8.7.1 2006 தொடக்கம் 2020 வரையில் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை**




**மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தேசிய தொழிற்தகைமை சட்டகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2020 ஆம் ஆண்டு நிறைவடையும் போது464,457 சான்றிதழ்களை விநியோகித்து நாட்டின் தொழிலாளர் படையிற்கு உயிர்ப்பான பங்களிப்புகளை வழங்கியுள்ளது.

# 9.0 மக்கள் தொடர்பு (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரிவு

## 9.1 பின்னணி

தொழிற்துறைக்கு அவசியமான திறன்மிக்க நபர்களை உருவாக்குதல் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அடிப்படையான எண்ணக்கருவாகும் என்பதுடன் காலத்திற்கு காலம் நிலவும் தொழிற்துறைசார் தேவைகளிற்கு இணங்க தொழிற்கல்வி துறையினை நாளதுவரையாக்குதல் நாட்டின் பொருளாதார நிலைமையினை மாற்றுவதில்நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றது. தொழிற்துறைசார் தேவைகளிற்கு இணங்க திறன்மிக்க இளைஞர் பரம்பரையினை உருவாக்கும் நோக்கில் தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி துறை ஆகியவற்றிற்கிடையில் அதிவிசால தொடர்பினை ஏற்படுத்துதல் மற்றும் நியம தொழில் வழிகாட்டல் சேவையொன்றினை மிகவும் வலுவானதாக நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டது.

அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவானது மிகவும் வலுவான முறையில் அவசியமான தொடர்புகளை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்ததுடன் அதற்கு இணையாக பல வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியதுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை புதிய பாதைக்கு கொண்டுசெல்வதற்கு ஏதுவாக பல சேவைகளையும் நடைமுறைப்படுத்தியுமுள்ளது. இங்கு, 04 துறைசார் திறன்கள் சபைகளை வலுவூட்டுதல் மற்றும் மாவட்ட செயலாளர்களின் தலைமையிலான மாவட்ட ரீதியிலான குழு செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் பிரதேச ரீதியில் இயங்கிவரும் வர்த்தக சம்மேளனங்களுடன் தொடர்புகளை வலுவூட்டி தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வித் துறையுடனான தொடர்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு முடிந்துள்ளது என்பதனை கூறமுடியும். அவ்வாறே, மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களை வலுவூட்டி வருடத்தின் பொதுவான திட்டத்திற்கு இணங்க தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை பற்றி மக்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் பலவற்றினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்துறைசார் உறவுகள் பிரிவினை 2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டாகும் போது மிகவும் பரந்த முறையில் செயற்படுத்த வேண்டிய தேவையானது ஏற்பட்டதுடன் அச் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக தகவல் நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரையில் அதன் செயற்பாடுகள் அனைத்து பிரிவுகளினதும் தகவல் வழங்கும் அலுவலர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 9.2 தொழிற்துறைசார் பிரிவின் நோக்கங்கள்

தொழிற்துறைசார் தேவைகளிற்கு ஏற்புடைய திறன்மிக்க மனிதவளத்தினை வழங்குதற்கு ஏதுவான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை உருவாக்குதல் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் பிரதான நோக்கமாக குறிப்பிடமுடியும். இந் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள துணை நோக்கங்களை செயற்படுத்துதல் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் முக்கிய பொறுப்பாகும்..

- தொழிற்துறைசார் திறன்கள் சபைகள், தொழிற்துறைசார் ஆலோசனை குழு, தொழில் அமைப்புகள் மற்றும் நிறுவகங்கள், வர்த்தக சம்மேளனம், தொழிற்துறையுடன் தொடர்புடைய பிரதான நிறுவகங்கள், சுய தொழிலாளர்கள் ஆகியோருடன் கூடுதல் தொடர்புகளை பேணுதல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி அளிப்பு தொடர்பாக பயன்படுத்தப்பட்டுவரும் தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக தொழிற்துறையின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல்.

- கைத்தொழிற்துறையில் ஏற்படும் தொழிநுட்ப மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி வழங்கல்களில் ஈடுபட்டுவரும் கல்விசார் அலுவலர்களிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் அவை தொடர்பான பயிற்சிகளை அவசியமாயின் வழங்குதல்.

- தற்போது வழங்கப்பட்டுவரும் தொழிற்பயிற்சிகள் மற்றும் தொழிற்துறைசார் கேள்விகள் ஆகியவற்றுக்கு இடையில் திறன் இடைவெளி காணப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து அதற்கு அவசிய முடிவுகள் மற்றும் சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சியினை பெற்றுவரும் பயிலுநர்களின் பொருட்டு தொழிற்துறைசார் பயிற்சி தொடர்பான பின்னுட்டல்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களிற்கு தொழிற்துறைசார் நிறுவகங்களில் காணப்படும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்தலை மேற்கொள்வதற்காக தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களை ஒருங்கிணைப்பதன் மூலமாக அவர்களிற்கு தொழில்வாய்ப்புகளை கண்டறிந்து கொள்வதற்கு உதவுதல்.

- முறைசார் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளாத தொழிற்துறை நிறுவகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தகைமை சான்றிதழ்களை விருதளிப்பது தொடர்பாக துறைசார் திறன்கள் சபைகளின் ஒத்துழைப்புடன் அவர்களிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் தொழிற் பாதையில் மேல்நோக்கி செல்வது தொடர்பாக அவர்களை தயார்படுத்தல்.

- கைத்தொழிற்துறை மற்றும் அவற்றில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக சமூகத்தில் சிறந்த அங்கீகாரத்தினை ஏற்படுத்தல்

- ஆணைக்குழுவின் சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் செயற்றிறனாகவும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

- பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவ மாணவியரிடையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களிடத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கவர்ச்சியினை ஏற்படுத்தல்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக ஒட்டுமொத்த சமூகத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பொது தொழில் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ளும் முகமாக அவசிய நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

- பல்வேறுபட்ட தொழிற்துறைகள் மற்றும் நிபுணர் குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் வளர்ச்சிக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தேசிய தொழிற்தகைமையானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதற்கு உரிய தரப்பினர்களுடன் தொடர்புபடுதல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவகங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தியின் நிமித்தம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்

## 9.3 செயற்பாடுகள்

மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்களை ஈடுசெய்யும் முகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவானது 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளது.

**9.3.1 நான்குதுறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு ஏதுவாக துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஒதுக்கீடுகளை துறைசார் திறன்கள் சபைகளின் செலவுகளை ஈடுசெய்வதற்கும் மற்றும் அவற்றினை மிகவும் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல்.**

**9.3.1.1 கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை**

**9.3.1.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை**

**9.3.1.3 உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை**

**9.3.1.4 சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை**

**9.3.2 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை மேற்கொள்ளல்.**

**9.3.3 துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஓர் தெளிவினை ஏற்படுத்துவதற்காக தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல்.**

**9.3.4 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையத்தின் சேவைகளை கணிப்பீடு செய்தல்**

**9.3.5 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய அபிவிருத்தி**

**திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் பற்றி மக்கள், பாடசாலை மாணவர்கள்,பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

9.3.6 வாடிக்கையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் வெளியீட்டினை தயாரித்தல்

9.3.7 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக அலுவலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை தெளிவுபடுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்

9.3.8 பொதுஜன ஊடகங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி துறைசார் பிரச்சாரங்கள் மற்றும் தகவல் வழங்கல் ஆகியவற்றினை மேற்கொள்ளல்

9.3.9 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் சந்தரப்பங்கள் தொடர்பாக குழுக்களுக்கும் மற்றும் விசேட தேவையுடைய நபர்களிற்கும் தெரியப்படுத்துதல்.

9.3.10 தொழில் வழிகாட்டலகள் மற்றும் மென்திறன் அபிவிருத்தி ஆகியன தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

9.3.11 துறைசார் திறன்கள் சபைகள் பிரதிநிதித்துவப்படுத்தாத துறைகள் சார்பாக மாகாண மட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்

9.3.12 துறைசார் திறன்கள் சபைகள், வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையங்கள் என்பன இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபடல்.

9.3.13 கொள்கை வகுத்தலின் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல்ஒழுங்கமைப்பு குழுவினை செயற்படுத்தல்

9.3.14 பொது தொழில்வழிகாட்டல் மத்திய நிலைய அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பொருட்டு மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கு அவசிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்

9.3.15 தொழிற்துறைசார் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு வசதியாக கலந்துரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றுக்கு இணங்க சிபார்சுகளை முன்வைத்தல்.

9.3.16 திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில்வழிகாட்டல் துறைசார் அலுவலர்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

**9.3.17 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக நிகழ்கால வேலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்கு அவசிய செயற்பாட்டினை மேற்கொள்ளல்**

**9.3.18 தேசிய தொழிற்தகைமையானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதற்கு உரிய தரப்பினர்களுடன் தொடர்புபடுதல்**

**9.3.19 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தியின் நிமித்தம் பல்வேறு நிறுவக திட்டங்களுடன் இணைந்து செயற்படல்**

**9.3.1 நான்குதுறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஒதுக்கீடுகளை துறைசார் திறன்கள் சபைகளிற்கு முற்பணமாக வழங்கி அவற்றினை மிகவும் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.**

தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் பங்களிப்பிற்கு இணங்க 04 துறைசார் திறன்கள் சபைகள் 2016 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டு நிலையில் காணப்படுவதுடன் செயற்திறன் குறைவாக காணப்பட்ட சுற்றுலா கைத்தொழிற்துறைசார் சபையானது 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. அதற்கிணங்க, கீழே தரப்பட்டுள்ள 04 துறைசார் திறன்கள் சபைகள் மற்றும் சுகாதார மற்றும் பாதுகாப்பு துறைசார் கலந்துரையாடல் குழு ஆகியன 2020 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நிலையில் காணப்பட்டன.

1. கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை
2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை
3. உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை
4. சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை
5. சுகாதார மற்றும் பாதுகாப்பு துறைசார் குழு

துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு அவசிய நிர்வாக செலவுகள் மாதாந்தம் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் வழங்கப்பட்டதுடன்உரிய செலவினங்கள் துறைசார் திறன்கள் சபைகளால் கணக்குத் தீர்க்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, இத் துறைசார் திறன்கள் சபைகள் 2020 ஆம் ஆண்டில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அச் செயற்பாடுகள் பின்வருமாறு.

### 9.3.1.1 கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி துறையின் கட்டுமான துறையில் ஈடுபட்டுள்ள பயிற்றுநர்களின் கோட்பாட்டு அறிவினை மேம்படுத்துவதற்கு நடாத்தப்பட்ட 05 வேலைத்திட்டங்கள் 12 கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றில் 64 பயிற்றுநர்கள் பங்குபற்றியிருந்தனர்.

- தேர்வு செய்யப்பட்ட கட்டுமான கம்பனிகளின் ஒன்றிணைந்த தொழிற் சம்மேளனங்களை ஸ்தாபிப்பதற்காக குழாய் பொருத்துதல், கட்டிட வர்ணம் பூசுதல் மற்றும் கட்டுமானம் ஆகிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட மூன்று தொழில்களில் ஈடுபட்டுள்ள மூன்று கட்டுமான கம்பனிகளுடன் பல கலந்துரையாடல் சுற்றுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, கட்டுமான தொழில் தொடர்பாக சயாம் சிட்டி சீமேந்து (லங்கா) உடனும் கட்டிட மற்றும் வர்ணம் பூசுதல் தொழில் தொடர்பாக நிப்போன் பெயின்ட் கம்பனி உடனும் குழாய் பொருத்துதல் தொழில் தொடர்பாகசென்றல் இன்டஸ்ரீஸ் கம்பனி (நென'ல்) உடனும் கலந்துரையாடப்பட்டது.

- சென்றல் இன்டஸ்ரீஸ் (பீ.எல்.சீ) கம்பனியுடன் குழாய் பொருத்துநர் சம்மேளனத்தினை (Plumber Guild) ஸ்தாபிப்பதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு குழாய் பொருத்துநர் சம்மேளனமானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் 60 குழாய் பொருத்துநர்கள் முதன்மையான சமூக அணியாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- இங்கு அங்கத்தவர்களை நாளாதுவரையாக்குவதற்கு விசேட உரையொன்று ஆற்றப்பட்டது. உரிய தொழில் வல்லுநர்களின் சமூக அங்கீகாரத்தினை அதிகரித்தல் மற்றும் மிகவும் உயர் மட்ட செயற்றிறனினை உறுதி செய்தல் ஆகியன இத் தொழில் சம்மேளங்களின் பிரதான கருப்பொருளாகும். இவ் வேலைத்திட்டமானது நாட்டின் ஏனைய மாகாணங்களிற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தொழிற்துறைசார் நிறுவகங்களில் தொழில்நுட்ப மட்ட அலுவலர்களிற்கு NVQ முறைமையில் கணிப்பீட்டாளர்களாக தொழில் புரிவதற்கான பயிற்சி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 04 கட்டுமான கம்பனிகளில் தொழில்நுட்ப மட்டத்தில் தொழில்புரியும் 15 நபர்களிற்கு NVQ முறைமையில் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு அவசிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ICC கம்பனியினை சேர்ந்த 05 பேரிற்கும் மற்றும் எட்வேட் மற்றும் கிறிஸ்ட் கம்பனியினை சேர்ந்த 04 பேரிற்கும் மற்றும் நவலோக கட்டுமான கம்பனியினை சேர்ந்த 03 பேரிற்கும் சங்கென் கட்டுமான கம்பனியினை சேர்ந்த 03 பேரிற்கும் இதற்கிணங்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

- தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் பாடத்திட்டங்களில் ஆராய்வுகள் மற்றும் மீளாய்வுகள் போன்றவற்றினை மேற்கொள்வதற்காக கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபையானது ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது. தற்போது பயன்பாட்டிலுள்ள தேர்ச்சி அடிப்படையிலான பாடத்திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல் ஆகியவற்றின் பொருட்டு தொழிற்துறைசார் நிபுணர்களின் பங்குபற்றல்களை வழங்குவதற்கு அவசியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வு மற்றும் மீளாய்வு ஆகியவற்றிற்கு உட்படும் தொழில்களாவன கொங்கிறீட் போடுதல், சீமேந்து பூசுதல் மற்றும் பிளொக் கல் கட்டுதல் என்பனவாகும்.

- நெகிழ்வான கற்றல் முறையுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களை அறிமுகம் செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. நெகிழ்வான கற்றல் முறைசார் நீகுடுஆரூவேலைத்திட்டங்களை அறிமுகம் செய்வதற்காக 03 விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் கட்டுமான கம்பனிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அக்'ன் பொறியியல் கம்பனி
- ஐசீசீ பொறியியல் கம்பனி
- நுடுளு புசழரிகம்பனி

- மாகா பொறியியல் கம்பனியானது நெகிழ்வான கற்றல் முறை (FLM) வேலைத்திட்டத்தின் பொருட்டு 60 இயந்திர இயக்குநர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளது.
- ELS Group கட்டுமான கம்பனியானது பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள 65 நிபுணர்களை நெகிழ்வான கற்றல் முறையின் பொருட்டு தேர்வுசெய்துள்ளது.
- மாகா பொறியியல் கம்பனியினால் தேர்வு செய்யப்பட்டுள்ள 60 இயந்திர இயக்குநர்களின் தொழிற் திறன் இடைவெளிகளை அடையாளங்காண்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியினை கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை வழங்கியுள்ளது.
- ELS Group கம்பனியில் சேவையில் ஈடுபட்டுள்ள 40 வரையிலான நபர்களின் திறன் இடைவெளியினை அடையாளங்காண்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியானது கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபையினால் வழங்கப்பட்டுள்ளது.
- முதிர்ந்த தேர்வுநாடி வழிமுறை (அக்'ன் பொறியியல் கம்பனி) என்ற முறையின் மூலம் NVQ மட்டம் 05 இனை வழங்குவதற்காக நடைபெற்ற கணிப்பீடு தொடர்பாக பங்குபற்றல். முதிர்ந்த தேர்வுநாடி வழிமுறை முறையின் மூலம் NVQ மட்டம் 05 இற்கு சமமான தகைமையொன்றினை வழங்குவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட கணிப்பீடு தொடர்பாக கட்டுமான துறைசார் திறன்கள் சபையானது நேரடியாக தொடர்புபட்டிருந்தது. கட்டுமானத்துடன் தொடர்புடைய இரண்டு தொழில்கள் தொடர்பாக இக் கணிப்பீடுகள் நடாத்தப்பட்டது. கணிப்பீட்டில் பங்குபற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 09 ஆகும்.
- கட்டுமான துறைசார் ஊழியர்கள் மற்றும் பயிற்சி நிறுவக ஆசிரியர்கள் ஆகியோரை புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் என்பன தொடர்பாக விழிப்புணர்வடையச் செய்தல்."நீண்டகால கட்டுமான தொழிற்துறை தொடர்பாக மர பயன்பாட்டின் பாதுகாப்பு மற்றும் நீண்ட காலம் பேணுதல்" என்ற தலைப்பின் கீழ் மாநாடு ஒன்று நடாத்தப்பட்டதுடன் அது நிபுணத்துவ தொழிற்துறையாளர்களின் சம்மேளனத்தினால் (OPA) ஒழுங்குபடுத்தப்பட்டு இணைந்த முறையில் நடைபெற்றது. 90 இற்கும் அதிகமான நபரகள் இவ் வேலைத்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.
- "நிபுணத்துவ விபரக் குறிப்பு" (உருக்கு கட்டமைப்புகள், கூரைத்தகடு, பர்லின் போன்றவை) என்ற தலைப்பின் கீழ் மாநாடு ஒன்று நடாத்தப்பட்டது. இதற்காக 115 இற்கும் அதிகமான நபர்கள் பங்குபற்றியிருந்தனர். இவ் வேலைத்திட்டத்திற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், கிறீன் பில்டிங் கவுன்சில், இலங்கை பொறியியல் நிறுவகம் மற்றும் 20 இற்கும் அதிகமான எண்ணிக்கையான கட்டுமான தொழிற்துறை நிறுவகங்கள் ஆகியவற்றின் சிவில் ஒப்பந்தகாரர்கள், சிவில் பொறியியலாளர்கள், கட்டிட வடிவமைப்பாளர்கள், கட்டமைப்பு (Structural) பொறியியலாளர்கள், தொழிற்துறை நிறுவகங்களின் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் பயிற்சி நிறுவகங்களின் பயிற்றுநர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

- மொடியூலர் ஒருங்கிணைப்பு மற்றும் அனுமதித்தல் - என்ற தலைப்பின் கீழ் மேலும் ஒரு மாநாட்டினை நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான அனுசரணையினை ஏக்கல பிரீஸ்ரேஸ்ட் கொங்கிறீட் இன்டஸ்ரீஸ் ஆனது வழங்குவதுடன் மேல் மாகாணத்திற்கு விதிக்கப்பட்ட ஊரடங்கு சட்டத்தினால் இதனை தற்காலிகமாக கைவிடுவதற்கு நேர்ந்துள்ளது.

- பயிற்சி மத்திய நிலையங்களின் பயிலுநர்களை "தொழிற்துறைசார் பயிற்சி" இன் பொருட்டு அமர்த்துதல். கட்டுமான தொழில்சார் 13 பயிலுநர்கள் கீழே தரப்பட்டுள்ள தொழிற்துறைசார் நிறுவகங்களில் தொழிற்துறைசார் பயிற்சியின் பொருட்டு அமர்த்தப்பட்டுள்ளனர். எட்வேட் மற்றும் கிறிஸ்ட் கம்பனியில் 07 பேரும் மற்றும் நவலோக கட்டுமான கம்பனியில் 03 பேரும் மற்றும் மாகா பொறியியல் கம்பனியில் 03 பேரும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

- கட்டுமான தொழிற்துறையில் நிலவும் "திறன்கள் இடைவெளியினை" கண்டறிவதற்கான ஆய்வு ஒன்றினை நடாத்துதல். இவ் ஆய்வினை செயற்படுத்துவதற்கு பொருத்தமான நிறுவகமொன்றினை தேர்ந்தெடுப்பதற்கு நியம முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளது. இத் திறன்கள் இடைவெளி ஆய்வு செயற்பாட்டின் அடிப்படையான ஆராய்ச்சியினை நடாத்துதல் மற்றும் தரமான மற்றும் போதியளவான மதிப்பீட்டு உபகரணங்களை தயாரித்தல் நிறைவுபெற்றுள்ளது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட அறிக்கையானது கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபையினால் ஆய்வு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 9.3.1.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் 1604 எண்ணிக்கையான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறுபட்ட தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாக பயிற்சி அளித்தல். இதற்காக 12 வேலைத்திட்டங்கள் நடாத்துதல்.

- தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 இனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத ஆனால் தகவல் தொழில்நுட்ப துறைசார் கூடுதலான கேள்விகள் நிலவும் இரண்டு பாடத்திட்டங்கள் (Mobile Application Development) மற்றும் (Game Development) ஆகியவற்றினைஆரம்பத்திலிருந்து இலகுவாக கற்கக்கூடிய முறை மற்றும் அவை தொடர்பான மென்பொருட்களை உருவாக்குதல் ஆகியன தொடர்பாக பயிற்சியளித்தல். இவ் வேலைத்திட்டங்களை பதிவு செய்யப்பட்ட யூ ரியூப் ஊடாக பெற்று கற்பதற்கான வசதிகளை வழங்குதல். Mobile Application Development இன் பொருட்டு 627 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் மற்றும் Game Development இன் பொருட்டு 344 ஆசிரியர்களும் பங்குபற்றியிருத்தல்.

- YOULEAD நிறுவகத்தின் பங்குபற்றலுடன் 100 தொழில் வழிகாட்டுநர்களிற்கு துறைசார் ஐந்து பாடவிதானங்கள் தொடர்பாக 05 வேலைத்திட்டங்களின் ஊடாக பயிற்சி அளித்தல்.

- YOULEAD நிறுவகத்தின்பங்குபற்றலுடன் மேலும் 100 தொழிற்பயிற்சி போதனாசிரியர்களிற்கு தகவல் தொழில்நுட்ப துறைசார் புதிய போக்குகள் தொடர்பாக தெரியப்படுத்துதல். இதனை 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் திகதி இலங்கை மன்ற நிறுவகத்தில் நடாத்துதல்.

- தகவல் தொழில்நுட்ப தொழிற்துறைசார் திறன்கள் சபையின் செயற்பாடுகள் மற்றும் 2025 தொலைநோக்கு தொடர்பாக பல்வேறுபட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்துதல். அவ்வாறே, அதி மேதகு ஜனாதிபதி அவர்கள், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் 2025 தொலைநோக்கினை ஏற்றுக்கொள்ளல்.

- உலக திறன்கள் தினத்தினை முன்னிட்டு ஆசிய பசுபிக் வலைய ஏனைய நாடுகளுடன் திறன்களை ஊக்குவிப்பதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்றினை ஆரம்பித்தல். பங்களாதேஃ், பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக அந் நாடுகளின் தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு சம்மேளனங்களின் அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் தகவல் தொழில்நுட்ப விடயத்திற்குரிய திறன்கள் இடைவெளியினை அடையாளங்காணபதற்கு திறன்கள் இடைவெளி ஆய்வினை ஆரம்பித்தல்

- தகவல் தொழில்நுட்ப துறைசார் தொழில்வாய்ப்பின்மை தொடர்பான அடிப்படையான காரணிகளை இனங்காண்பதற்கு இரண்டு உள்ளக ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல்.

- தொழில் வழிகாட்டல் செயற்பாட்டிற்கு பயன்படுத்தும் பொருட்டு தொழில்கள் அடங்கிய விபரங்களை கொண்ட தழடி ழரவடழழமள இனைதகவல் தொழில்நுட்ப உதவியாளர், தரவு பகுப்பாய்வாளர், வடிவமைப்பு படவரைஞர் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி போன்ற துறைகளிற்காக அபிவிருத்தி செய்தல்.

### 9.3.1.3 உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை

- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் நிறுவகங்கள் மற்றும் உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை என்பவற்றிற்கிடையில் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இங்கு, பிரிவு 17 இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு தெரியப்படுத்தல் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கு இணையாக கல்வி அமைச்சின் வேண்டுகோளிற்கு இணங்க உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் நிறுவகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. அதற்காக, தொழில்நுட்ப பிரிவுகளான பிளாஸ்டிக் பிரிவு, இரப்பர் பிரிவு, உலோகத்துடன் சம்பந்தப்பட்ட தொழிற்துறை பிரிவு, வார்ப்பு பிரிவு, மரங்களுடன் சம்பந்தப்பட்ட தொழிற்துறை பிரிவு மற்றும் விவசாய பிரிவு ஆகியன பிரதிநிதித்துவம் செய்தன.

- திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட Flexible Learning Model (FLM) வேலைத்திட்டம் தொடர்பாக உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் நிறுவகங்களை ஈடுபடுத்தல். இதற்காக சில வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் பங்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

    - மோட்டார் வாகன பிரிவு
    - விவசாய பிரிவு
    - ஆடை தயாரித்தல் பிரிவு
    - உணவு தயாரித்தல் பிரிவு

- Sinhagiri Pvt Ltd, Fame International Pvt Ltd , United Motors PLC, Cleantech Pvt Ltd போன்ற தனியார் துறை நிறுவகங்களிற்களிற்கு குழுக்களாக விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

- Employee Linked Training Purchased Programme வேலைத்திட்டம் தொடர்பாக அவசிய செலவின மதிப்பீடுகளை தயாரித்தல். இங்கு, பால் கறத்தல் இயந்திர இயக்குநர், ஒன்றிணைந்த அறுவடை மேற்கொள்பவர், தயாரிப்பு மேற்பார்வையாளர் போன்ற தொழில்வாய்ப்புகள் தொடர்பாக செலவின மதிப்பீடுகளை தயாரித்தல்.

- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறையின் தொழில்சார் தொலைநோக்கினை தயாரித்தல். துறைகள் பலவற்றின் கீழ் தொழிலசார் தொலைநோக்கானது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதனால் நிலவும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக இளைஞர்களிற்கு பாரிய விளக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது.

- அதற்கிணங்க, பால் கறக்கும் இயந்திர இயக்குநர், நான்கு சக்கர உழவு இயந்திர இயக்குநர், அலுமினிய சட்டகம் புனைபவர், சூரிய வலு வோற்றளவு தொழில்நுட்ப வல்லுநர், காய்ச்சி இணைப்பவர் மற்றும் பொருத்துநர் போன்ற தொழில்கள் தொடர்பாக தொழில்சார் தொலைநோக்கானது தயாரிக்கப்பட்டுள்ளது.

- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறை தொடர்பில் நிலவும் திறன்கள் இடைவெளியினை குறைப்பதற்கு தேசிய பயிற்சி நியமங்களை தயாரித்தல். அதற்கிணங்க, வார்ப்பு தொழில்நுட்ப வல்லுநர், இரப்பர் பால் தயாரிப்பு தொழில்நுட்ப வல்லுநர் போன்ற துறைசார் தயாரிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கு இணங்க உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் கணிப்பீட்டாளரகளை வழங்குதல் தொடர்பாக செயற்படல். இதன்கீழ், சில துறைகள் தொடர்பாக வளவாளர்கள் 10 பேர் வரையில் வழங்கப்பட்டுள்ளனர்.

### 9.3.1.4 சுற்றுலா துறைசார் திறன்கள் சபை

- தேசிய தொழில் வழிகாட்டல் வழிநடத்தும் குழு கூட்டத்தில் பங்குபற்றல் மற்றும் குழுவினை பிரதிநிதித்துவம் செய்தல்.

- வருடம் முழுவதும் சுற்றுலா துறைசார் திறன்கள் சபையினை பிரதிநிதித்துவம் செய்யும் பிரிவுகளை தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

- வருடாந்த பொது கூட்டத்திளை (2018 - 2019) யூன் மாதம் 23 ஆம் திகதி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) கேட்போர்கூடத்தில் நடாத்துதல்

- தொற்று நோயினை அடிப்படையாக கொண்டு சுற்றுலா வியாபாரத்தில் தொழில்வாய்ப்புகளை இழந்த நபர்களிற்கான மாற்று தொழில்வாய்ப்புகள் பற்றி கலந்துரையாடுவதற்கு மேலதிக செயலாளர், திறனகள் பிரிவு அபிவிருத்தி திட்டம் அவர்களின் பங்குபற்றலுடன் கூட்டமொன்றினை நடாத்துதல்.

- மாற்று தொழிலாக சுகாதார பாதுகாப்பு (Health care), முதியோர் பாதுகாப்பு டூடனநசஉயசநரூவிவசாயம் மற்றும் மொழிகளை கற்பித்தல் போன்றவற்றினை மிகவும் பொருத்தமான பிரிவுகளாக தேர்வு செய்தல்.
- சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபையின் இணையத் தளத்தினை (TISC-LK) நிர்மாணித்தல்.
- முகப் புத்தகம பக்கம் (Facebook page), Linkdin மற்றும் Twitter போன்ற சமூக கணக்குகளை உருவாக்கி துறைசார் தகவல்கள் தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொள்ளல்.
- புத்தாக்க சமூக அபிவிருத்தி மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரியமற்ற தொழில்கள் தொடர்பாக பெண்களின் பங்குபற்றல்களை ஊக்குவித்தல் பற்றிய செயலமர்வில் பங்குபற்றல் மற்றும் கருத்துக்களை வழங்குதல்.
- கோவிட் 19 தொற்று நோய் காரணமாக சுற்றுலா தொழிற்துறையிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சுற்றுலா தொழிற்துறையிற்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு அவசிய பயிற்சிகளை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் நிமித்தம் திறன்கள் இடைவெளியினை அடையாளங்காண்பதற்கு ஆய்வொன்றினை நடாத்துதல்.
- பிரித்தானிய கவுன்சில் (British Council) உடன் இணைந்து ஆங்கில மொழி பாடநெறியினை இணையத்தளம் ஊடாக இலவசமாக கற்பதற்கு அங்கத்தவர்களிற்கும் மற்றும் துறைசார் மாணவர்களிற்கும் சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- சமையல் சாப்பாடு தொடர்பான காட்சிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அலுவலர்களின் பொருட்டு நடாத்துதல்.
- பயிற்றுநர்களிற்கு பயிற்சியளித்தல் வேலைத்திட்டத்தின் கீழ் சபையின் இரு அங்கத்தவர்களின் பங்களிப்புகளுடன் உணவு, பானங்களுடன் கூடியதாக பயிற்றுநர் பயிற்சி அளிப்பு வேலைத்திட்டத்தினை நடாத்துதல்.
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்படும் தேசிய சுற்றுலா வழிகாட்டல் மற்றும் சுற்றுலா சாரதி வழிகாட்டல் ஆகிய பாடநெறிகளை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) நடாத்துவதற்கான அனுமதியினை வழங்குவதற்கான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த சபை பொதுக் கூட்டத்தினை (2019 - 2020) டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடாத்துதல்.

### 9.3.2 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை மேற்கொள்ளல்.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் அபிவிருத்தியின் நிமித்தம் துறைசார் திறன்கள் சபைகளால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்படும் யோசனைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அவ்வாறான யோசனைகளில் நடைமுறைப்படுத்தப்படக்கூடியதும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான தேவைகள் காணப்படுகின்றதுமான செயற்பாடுகளிற்கான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு நடவடிக்கை மேற்கொள்கின்றது. ஆயினும் 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 நிலைமையின் காரணத்தினால் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக நிதி ஒதுக்கீடுகளிற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை.

### 9.3.3 துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக தலைவர்களுடன் கூட்டங்களை நடாத்துதல்

துறைசார் திறன்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுகள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் ஆகியவற்றின் பொருட்டு மாதாந்தம் தலைவர்களின் கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாமல் போயுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் 03 கூட்டங்களை மாத்திரம் நடாத்துவதாக இருந்தது. அவசியமான தொடர்பாடல் செயற்பாடுகள் மின்னஞ்சல் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

### 9.3.4 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் பற்றி மக்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

பல்வேறு தொழில்களிற்குரியதாக அந்தந்த தொழில்களின் கட்டமைப்புகளை காட்டும் வகையில் துழடி ழுரவடழழமள உருவாக்கப்பட்டுள்ளது. விசேடமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்குரிய 11 Job Outlooks கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

### 9.3.5 வாடிக்கையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் வெளியீட்டினை தயாரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சேவைகளை பொதுமக்களிடையில் கொண்டுசெல்லல் மற்றும் சரியான தகவல்களை வழங்குதல் போன்ற விடயங்களை முன்னிறுத்தி தகவல் வெளியீடு ஒன்றினை அச்சிடும் செயற்பாடு 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அத் தகவல் வெளியீட்டினை ஆங்கில மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்து அச்சிடுவது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 9.3.6 அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவை தொடர்பாக பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரை தெளிவுபடுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்

தற்போது பயன்பாட்டிலுள்ள துண்டுப்பிரசுரத்தினை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக Face Book மற்றும் Youtube ஆகியவற்றினூடாக பிரச்சார செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக E-flyers, போஸ்டர், பனர் போன்றன தயாரிக்கப்பட்டு பிரச்சார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 9.3.7 பொதுஜன ஊடகங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி துறைசார் பிரச்சாரங்கள் மற்றும் தகவல் வழங்கல் ஆகியவற்றினை மேற்கொள்ளல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தகவல்களை வழங்குதல் மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக தெரியப்படுத்தல் ஆகியவற்றின் பொருட்டு பொதுஜன ஊடகங்களை பயன்படுத்தி பொதுமக்களை விழிப்புணர்வடைய செய்தல் பொதுமக்கள் தொடர்பு பிரிவின் மூலம் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் பல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பங்குபற்றல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.தேசிய வானொலி மற்றும் தனியார் வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொலைக்காட்சி வேலைத்திட்டங்கள் தொடர்பாக இதன் கீழ் வளவாளர் தொடர்பான பங்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எமது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளிற்கு அமைவாக கிடைக்கப்பெற்ற பதில்களிற்கு இணங்க 05 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் மற்றும் 04 வானொலி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றியுள்ளதுடன் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய வானொலி மூலம் மேற்கொள்ளப்பட்டன.

கோவிட் 19 முதலாவது அலையின் போது பயிற்சி மத்தியநிலையங்கள் மூடப்பட்டமையினால் மாற்று கற்றல் முறைமையாக ஐ சனல் மற்றும் நேத்ரா தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை தொடர்பாக மூன்று மொழிகளிலுமான 80 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒளிபரப்பப்பட்டன.

மேலும், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு மூலமான ஏழாவது மணி நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 03 நாற்சந்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தேசிய தொழிற்தகைமை முறை மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை ஆகியவை பற்றிய தெரியப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய வானொலியின் சுதேச சேவையூடாக 2020.09.02 ஆம் திகதியன்று ஒளிபரப்பாகிய மக்கள் சந்திப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றப்பட்டது. மேலும், ரங்கிரி வானொலியின் நேரடி நிகழ்ச்சித்திட்டமாக 2020.08.19 ஆம் திகதியன்று இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய போக்கு தொடர்பாக மக்களை தெளிவூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.தேசிய வானொலியில் சார பிரபாகிர 06 நேரடி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

முகப் புத்தக பக்கத்தினூடாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக 25 தெரியப்படுத்தல்களும் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் தலைமையில் நிர்மாணிக்கப்பட்ட வட்ஸ் அப் குழு ஊடாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக 18 தெரியப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஐ சனல் மற்றும் நேத்ரா ஆகிய அலைவரிசைகள் மூலம் ஒளிபரப்பப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார்ந்த மூன்று மொழிகளிலுமான 60 நிகழ்ச்சித்திட்டங்கள் யூ ரியூப் வீடியோ ஊடகத்தின் மூலம் தெரிந்து கொள்வதற்கும் மற்றும் தரவிறக்கம் செய்வதற்கும் ஏற்ற வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுயினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாகதெரியப்படுத்தும் 06 செயற்பர்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 9.3.8 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைதொடர்பாக காணப்படும் நிலைமைகள் தொடர்பாக தேர்வுசெய்யப்பட்ட குழுக்களிற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் நன்மைகள் அனைத்தும் குடிமக்களிற்கு அவ்வாறே கிடைக்கப்பெறல் வேண்டும் என்பதுடன் அதில் ஒரு கட்டமாக தொழிற்துறைக்கான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதனை நோக்காக கொண்டு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளிற்கு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார்பாக கிராம மட்டத்தில் தெரியப்படுத்துவதற்கு அவசியமான 10 நிகழ்ச்சித்திட்டங்கள் 05 நாட்களில் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக 265 புதிய பட்டதாரிகள் பங்குபற்றியிருந்தனர்"இதற்கான வளவாளர் தொடர்பான பங்களிப்பானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

### 9.3.9 துறைசார் திறன்கள் சபைகள் பிரதிநிதித்துவப்படுத்தாத துறைகள் சார்பாக மாகாண மட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள தொழிற்துறையாளர்கள், பயிற்சி நிறுவகங்கள்,தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் ஆகியன இணைந்து தொழில்களிற்கு ஏற்றவாறான பயிற்சிகளை அடையாளங்காணல், அவற்றினை மேம்படுத்தல், தொழிற்துறைக்கு அவசியமான மென்திறன்களின் அபிவிருத்தி போன்ற பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு தொழிற்துறைசார் பயிற்சிகளை மிகவும் வலுப்படுத்தி பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தொழிற்துறையாளர்களிடையில் சிறந்த ஓர் உறவினை ஏற்படுத்துதல் இதன் எண்ணக்கருவாகும். அதற்கிணங்க, 2020.03.12 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்ட தொழிற்துறைசார் சம்மேளனத்தினை ஸ்தாபித்தல் 50 பேரின் பங்குபற்றலுடன் மாத்தளை நாவுல தொழிற்பயிற்சி மத்திய நிலையத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

சந்தை தொழில்வாய்ப்பு வசதிகளை திட்டமிடுதல் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தலைமையில் மொனராகல மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் 110 பேரின் பங்குபற்றலுடன் மொனராகல மாவட்டத்தில் 2020 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. அவ்வாறே, 2020 டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று பதுளை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெற்றதுடன் அதில் 112 பேர் பங்குபற்றியிருந்தனர்.

கீழே தரப்பட்டுள்ள உபகுழுக்களை ஸ்தாபித்தல் மற்றும் உரிய அலுவலர்களை நியமித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

- பாடசாலை உபகுழு
- தொழிற்துறை உபகுழு
- மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உபகுழு
- சுயதொழில் அபிவிருத்தி உபகுழு
- தொழிலாளர் சந்தை மற்றும் தொழில் உபகுழு
- வள பங்கீட்டு உபகுழு

தொழிற்துறையுடன் நிரந்தரமான தொடர்பினை பேணும் நோக்கில் கண்டி மாவட்டத்தில் தொழிற்துறையாளர்களிற்கு தேசிய தொழிற்தகைமை முறைமை மற்றும் அதனால் தொழிற்துறைகளிற்கு ஏற்படக்கூடிய நன்மைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வொன்று 2020.03.05 ஆம் திகதியன்று முற்பகல் 9.30 மணியிலிருந்து 10.30 மணி வரையில் ஏற்றுமதி வலைய கேட்போர்கூடம்,டூடழுஜரூபல்லேகல இல் நடாத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டம் தொடர்பாக 27 தொழிற்துறைசார் நிறுவகங்கள் பங்குபற்றியிருந்தன. போலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டபோதிலும் கோவிட் 19 நிலைமை காரணமாக நடாத்த முடியாமல் போயுள்ளது.

### 9.3.10 துறைசார் திறன்கள் சபைகள், வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையங்கள் என்பன இணைந்து பிரச்சார வேலைத்திட்டங்ளை நடாத்துதல்.

மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களுடன் இணைந்து திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் தொழிற்துறைசார் திறன்கள் சபைகள் மற்றும் தொழிற்துறை சபை நிறுவகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து தொழிற்துறையாளர்களிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 9.3.11 கொள்கை வகுத்தலின் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைப்பு குழுவினை செயற்படுத்தல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தொழில் வழிகாட்டல் சேவைகளை மிகவும் வலுவூட்டுவதற்கு தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்குபடுத்தும் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு தொழிற்கல்வி துறைசார் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல எண்ணிக்கையான நிறுவகங்களிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். இங்கு தொழில் வழிகாட்டல் சேவையினை பொது சேவையாக நடைமுறைப்படுத்தும் தேவைப்பாடானது அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க தொழில்வழிகாட்டல் சேவை தொடர்பான பரந்த கற்கை ஒன்று தொடர்பாக அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் 02 கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

### 9.3.12 பொது தொழில்வழிகாட்டல் மத்திய நிலைய அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பொருட்டு மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கு அவசிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்

மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களை மனதை கவரும் அழகிய தோற்றத்துடன் பேணுவதற்காக நிதி ஒதுக்கீடுகள் அவசியமாக காணப்பட்ட நான்குமத்திய நிலையங்களிற்கான ஒதுக்கீடுகள் உரிய பிரதான அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, மாட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கட்டுகஸ்தோட்ட, களுத்துறை, பொலன்னறுவை மற்றும் புத்தளம் ஆகிய மத்திய நிலையங்களிற்கு ஒதுக்கீடுகளை வழங்கி அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### 9.3.13 தொழிற்துறைசார் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு வசதியாக மதிப்பீட்டு செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

தொழிற்துறைசார் பயிற்சிகளை மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் நடைமுறைப்படுததுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 02 சுற்று கலந்துரையாடல்கள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டதுடன் ஒன்லைன் முறையூடாக தொழிற்துறைசார் பயிற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதங்கிணங்க, எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையானது ஒப்புதலினை அளித்துள்ளது.

### 9.3.14 திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில்வழிகாட்டல் துறைசார் அலுவலர்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளை பிரஜைகளிடத்தில் சரியான முறையில் வழங்கும் பிரதான அலுவலர் குழுவில் உள்ளடங்குவது தொழில் வழிகாட்டல் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவலர்களாவர். அவ் அலுவலர்களின் அறிவினை நாளதுவரையாக்கல் மற்றும் புதிய தரவுகள் தொடர்பாக தெரியப்படுத்தல் ஆகியன மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய சேவையாகும். இங்கு,தொழில் வழிகாட்டலில் ஈடுபட்டுள்ள 25 அலுவலர்களிற்கு ஹோட்டல் மற்றும் சுற்றுலா துறைசார் 03 நாட்கள் செயலமர்வொன்று யூ லீட் நிறுவகத்துடன் இணைந்து நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயலமர்வு தொடர்பாக கள விஜயம் ஒன்றும் திட்டமிடப்பட்டிருந்தது.

அவ்வாறே, தொழில் வழிகாட்டலில் ஈடுபட்டுள்ள 50 அலுவலர்களிற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான இரண்டு வதிவிட செய்முறையுடனான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இச் செயலமர்வுகள் இலங்கை மன்றத்தில் நடைபெற்றதுடன் இங்கு புதிய தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செய்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக யூ லீட் நிறுவகம் அனுசரணையினை வழங்கியிருந்தது.

### 9.3.15 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக நடப்பு வேலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்கு அவசிய செயற்பாட்டினை மேற்கொள்ளல்

சாரபிரபாகிர வானொலி நிகழ்ச்சித்திட்டதின் மூலம் ஒலிபரப்பாகிய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கியதாக லுழரவரடிந நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 9.3.16 தேசிய தொழிற்தகைமைக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரத்தினை ஏற்படுத்தும் பொருட்டு உரிய தரப்புகளுடன் கலந்துரையாடுதல்

தேசிய தொழிற்தகைமை முறைமையானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதற்கு ஏதுவாக சவுதி அரேபியாவின் தகைமைகளை அங்கீகரிக்கும் நிறுவகத்துடன் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுமதியின் பொருட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, எமிரேட்ஸ் டூருயுறு) அரசுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, ஏனைய நாடுகளுடன் அவசிய முறையில் தொடர்புகொள்வதற்கான கோரிக்கைகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 9.3.17 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு நிறுவக செயற்றிட்டங்களுடன் இணைந்து செயற்படுதல்

துறைசார் அபிவிருத்தியின் பொருட்டு உலக தொழிலாளர் அமைப்பு,லுழரடநயனஇ முழுஜஊயு மற்றும் இந்தியாவின் ளுஉாநெனைநச நுடநஉவசஉை ஆகியவற்றுடன் இணைந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ளுஉாநெனைநச நுடநஉவசஉை உடன் கலந்துரையாடப்பட்ட உதவி செயற்றிட்டத்தின் கீழ் மின் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் அபிவிருத்தியின் நிமித்தம் யோசனைகளை முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தி தொடர்பாக உதவியளிக்கும் திட்டங்கள்/ வேலைத்திட்டங்களுடன் இணைந்து செயற்படுதல்
- தொழில் வழிகாட்டல் தொடர்பாக தேசிய தேர்ச்சி நியமம் மற்றும் பாடத்திட்டம் ஆகியவற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- சுகாதார மற்றும் பாதுகாப்பு சபையுடன் மாதாந்த கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் அது தொடர்பான ஒருங்கிணைப்பு பணியினை மேற்கொள்ளல். இச் சபை மூலம் தயாரிக்கப்பட்டுவரும் தேசிய தேர்ச்சி நியமம் மற்றும் பாடத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- தொழில் வழிகாட்டலில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை குழுவாக்குதல் தொடர்பாக தரவு முறைமை ஒன்றினை ஸ்தாபித்து அதற்கான தகவல்களை சேகரித்தல்.
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சேவைகள் தொடர்பாக ஒட்டுமொத்த பிரஜைகளிற்கும் தெரியப்படுத்துவதற்கு கண்காட்சிகள் அடங்கலான வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் பங்குபற்றல். 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 01 ஆம் திகதி வரை ஹோமாகம ஜனாதிபதி வித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் பங்குபற்றி தேசிய தொழிற்தகைமை முறைமை மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையிற்குரிய தகவல்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.
- வுழரஉா லுழரச குரவரசந திறன்கள் மற்றும் புத்தாக்க போட்டியின் முதலாவது சுற்றானது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதியன்று நாடு பூராவும் 03 மத்திய நிலையங்களில் 111 போட்டியாளர்களின் பொருட்டு நடாத்தப்பட்டது.
- தேசிய ரீதியில் இடம்பெறும் துறைசார் வேலைத்திட்டங்கள் தொடர்பாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பிரதிநிதித்துவத்தினை வழங்குதல்

- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தராதர அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்ட தனியார் துறை பயிற்சி நிறுவகங்களின் பிரச்சினைகளை தீர்த்து அவைகளுடனான தொடர்புகளை கூடியளவில் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தொடர்பாக தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் அலுவலர்கள் பங்குபற்றுவதுடன் பிரதேச தொழிற்துறை சபை மற்றும் இணைந்து பணியாற்றல் தொடர்பாக இக் குழுவில் யோசனைகளை முன்வைத்தல்.

- தொழிற்துறைசார் திறன்கள் சபைகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத ஏனைய துறைகள் தொடர்பாக சுயமாக செயற்படக்கூடிய நிபுணர்களின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் விண்ணப்பங்களை கோருதல்

## 10.0 தகவல் முறைமைகள் பிரிவு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் பல்வேறுபட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தி அத்தகவல்களை உரியவர்களுக்கு வழங்கும் பணியானது செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது.இப் பணியை நிறைவேற்றுவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானது பயன்படுத்தப்படுவதுடன், அதனூடாக தகவல்களை மிக சுலபமாக பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முடியும். தகவல்களை ஒட்டு மொத்தமாக கணனியில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நிறுவகத்தின் அபிவிருத்தியை எட்டுவதற்கு இயலும். மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவானது அத்தியாவசிய தகவல் சேவைகளை முறையாக வழங்குவதன் பொருட்டு, நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்றது. அத்தகவல்களை நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் வழங்கிவருவதுடன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் மூலோபாயங்கள் மற்றும் உரிய திட்டமிடல்கள் என்பனபவற்றுக்காக நாளாந்தம் துரிதமாக அதிகரித்து வரும் தகவல்களை தரவுத் தளத்தின் ஊடாக வழங்கியும் வருகின்றது.

### தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான குறிக்கோள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒழுங்காக்குவதற்கும் சுலபமாக்குவதற்கும் அவசியமான பல்வேறுபட்ட கணனி தகவல் முறைமைகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் முறைமைகள் பிரிவானது பணிப்பாளர், பதில் தொழிலாளர் சந்தை பகுப்பாய்வாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் நூலகர், பதில் பிரதி பணிப்பாளர், 03 உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கணினி வரைகலை வடிவமைப்பாளர் ஆகியோரைக் கொண்ட பதவியணியொன்றை 2020 ஆம் ஆண்டில் கொண்டிருந்தது.

### தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன.

- தொழிலாளர் தேவை தொடர்பான விளம்பரங்களை பகுப்பாய்வு செய்து தொழிற் சந்தை தகவல் வெளியீட்டினை தயாரித்தல் மற்றும் வெளியீடு செய்தல்
- தேவைக்கேற்ப தொழிலாளர் சந்தை தகவல்களை பகுப்பாய்வு செய்தல்
- எதிர்வரும் வருடத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டியினை (TVET Guide) வெளியீடு செய்வதல் மற்றும் தேவையான தகவல் முறைமையொனறினை பேணுதல்
- தொழிலாளர் சந்தை தகவல் முறைமை மற்றும் இணையத் தள பக்கத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை தகவல் தொடர்பான பருவ வெளியீட்டினை (Newsletter) தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக கணனி முறைமையினை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ள நிறுவகங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு அவசியமான கணனி மென்பொருளினை பேணுதல் மற்றும் இச் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொண்டு செல்வதற்கு அவசிய தகவல்களை சம்பந்தப்பட்ட நிறுவகங்களிற்கு வழங்குதல்

- UNEVOC பிராந்திய மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதன் பணிகளையும் வேலைத்திட்டங்களையும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல்

- எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேவையான TVEC இணையத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், பேணுதல் மற்றும் இணையத்தளத்தினை நாளாதுவரையாக்குதல்.

- தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தேவையான கணனி மென்பொருட்ளினை பேணுதல், தேவையான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக ஏனைய பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் அத்தரவுகளை முகாமைத்துவம் செய்தல்

- திறன்கள் அனுமதிப்பத்திரத்திற்கு (Skills Passport) அவசியமான கணனி மென்பொருளினை பேணுதல் மற்றும் திறன்கள் அனுமதிப்பத்திரத்தினை விநியோகித்தல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவிற்கும் அவசியமான கணனி இயந்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாகவுள்ள தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு தேவையான விபரக் குறிப்பினை வழங்குதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்

- இவ்வாணைக்குழுவில் கணனி வலையமைப்பினை ஒழுங்குசெய்தல், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை ஏற்படுத்தல், இவற்றுக்கு அவசியமான சேவர்களை (Servers) ஒழுங்கான முறையில்பராமரித்தல்மற்றும் அவற்றுக்கான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றினை நாளாதுவரையாக்கல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான தகவல் சேவைகளை திட்டமிடல் மற்றும் நூலகத்தினை நடாத்திச் செல்லுதல்

- தேவைக்கேற்ப உரிய தொழிலாளர் சந்தை தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வழங்குதல்,ஆணைக்குழுவின் அலுவல்களிற்கு அவசிய கணனி வரைபடங்களை வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகள் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றன.

- சர்வதேச ரீதியில், நாடுகளின் கல்வி சுட்டிகள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு அவசிய புள்ளிவிபரங்களை யுனெஸ்கோ நிறுவகத்திடம் வழங்குவதற்கு இலங்கையின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான தகவல்களை வருடாந்தம் தயாரித்தல்.

இப்பிரிவின் பிரதான தகவல் முறைமைகளாவன, தொழிற் சந்தை தகவல் முறைமை, தேசிய தொழிற்தகைமை அளிப்பு முறைமை மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி முறைமை மற்றும் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல், பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல் தொடர்பான தகவல் முறைமை போன்றவவாகும். 2020 ஆம் ஆண்டில் தகவல் முறைமைகள் பிரிவிற்கு பின்வரும் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

## 10.1 தொழிலாளர் சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையின் நடப்பு தொழிற் கேள்விகள்.ஃ. கிராக்கிகள் மற்றும் ஏனைய தொழிற் சந்தைத் தகவல்கள் போற்றவற்றினை வழங்குதலை குறிக்கோளாகக் கொண்டு அதற்குரிய தொழிலாளர் சந்தை தகவல் முறைமையொனறினை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஸ்தாபித்துள்ளது.

தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை தொழிலாளர் சந்தை துறைசார் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள்,தொழிலுக்கு அமர்த்தும் நிறுவகங்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் தருநர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் ஆகியோரிற்கு பயனுறும் விதமாக பிரசுர வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் வெளியீடு செய்யப்படும் தொழிலாளர் சந்தை தகவல் பருவ வெளியீடுகளாகவும் (LMI Bulletin) மற்றும் ஆணைக்குழுவின் இணைய தள பக்கம் www.tvec.gov. டமமூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

## 10.2 தொழிலாளர் சந்தை தகவல் பருவ வெளியீட்டை தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்

2020 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற்சந்தை பருவவெளியீடுகளை பிரசுரிப்பதற்கு இப்பிரிவுக்கு முடிந்துள்ளது. இப்பிரசுரங்களின் மூலம் 2019 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிலும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிலும் இலங்கையின் தொழிலாளர் சந்தையில் நிலவிய நிலைவரங்கள் மிகவும் வெளிப்படையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் சந்தைத் தகவல் பருவ வெளியீடு பின்வரும் ஐந்து (05) பாகங்களை கொண்டுள்ளது.**

1. தொழிலுக்காக நிலவுகின்ற கேள்விகள்
2. தொழில் வாய்ப்புகள்
3. தொழில் வாய்ப்பின்மைகள்
4. தொழிற் சந்தை வழங்கல்கள் அல்லது பல்வேறுபட்ட தொழில்கள் தொடர்பாக நிலவும் தொழிலாளர்களின் வழங்கல்கள்
5. தொழிற் சந்தை தொடர்பாக நிலவும் கேள்விகள் மற்றும் ஆராய்ச்சித் தகவல்கள்

2020 ஆம் ஆண்டில் தொழிற் சந்தைத் தகவல் பிரசுரத்தின் ஒரு புதிய பரிணாமாக, தொழிலாளர் சந்தை தொடர்பாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், தொழிலாளர் படை தொடர்பான தகவல்கள் என்பவற்றை தொழிலாளர் சந்தை போக்குகள் தொடர்பாக விசேடமான ஆர்வமுடையோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வண்ணம் இப்பிரசுரத்தில் வெளியீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளர் சந்தை தகவல் பிரசுரத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியில் தொழில்களுக்கான கேள்விகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியிலான பத்திரிகை விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கைத்தொழிற் துறைசார் வேலைவாய்ப்புக்கள், தொழிலுக்கு அமர்த்துதல்கள், கல்வித் தகைமைகள், பால், அனுபவம் போன்ற தொழில்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு வருடத்திலும் "ஞாயிறு லங்காதீப" மற்றும் "Sunday Observer" ஆகிய பத்திரிகைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்ட விளம்பரங்களின் எண்ணிக்கைகள் அட்டவணை 8.1 இல் காட்டப்பட்டுள்ளது.


**அட்டவணை 8.1: வெளியிடப்பட்டுள்ள தொழில் வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரங்களின் எண்ணிக்கை**

| வருடம் | நிலவிய தொழில் வெற்றிட விளம்பரங்களிள் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 104,839 |
| 2007 | 113,060 |
| 2008 | 116,157 |
| 2009 | 82,167 |
| 2010 | 124,741 |
| 2011 | 108,193 |
| 2012 | 136,994 |
| 2013 | 107,698 |
| 2014 | 91,430 |
| 2015 | 81,369 |
| 2016 | 74,245 |
| 2017* | 226,555 |
| 2018 | 215,991 |
| 2019 | 160,933 |

**(* 2017 ஆம் ஆண்டிலிருந்து சிலுமின பத்திரிகைக்கு பதிலாக லங்காதீப பத்திரிகையானது பயன்படுத்தப்படுகின்றது)**




